★

தலைவரின் தோற்றம்

—

வான்கோழியின் வம்பு

—

கொலுப் பொம்மைகள்


—

இலட்சத் தீவுகள்

★

# திராவிடநாடு

11-3-56 ★ வார வெளியீடு ★ விலை 2 அணா





**காமராஜரும் கங்காணியே!**

**பெரியாரின் [illegible]!! (கம்பி)**

# கேட்டீரா, சேதியை!

ஓய்வு விடுதிகள்! உல்லாசக் கூடங்கள்! அலுவலகங்கள்! முச்சந்திகள்! இல்லங்கள்! எங்கு நோக்கினும் அவனது படம்தான். அதிகாரிகள், கண்டால் மரியாதை காட்டுவர். மக்களோ, அவனுருவைக் கண்டு மிரளுவர். அவன் இட்டதே சட்டம்! வைத்ததே கட்டளை!—என்று, ஏகச் சக்ராதிபதியைப்போல் அர்ஜென்டைனாவை ஆண்டுவந்த ஜான்பிரான் கடந்த 26-ந் தேதி பனாமா நகரில் தங்கியிருந்த ஒரு ஓட்டலிலிருந்து விரட்டப்பட்டானாம்! காசில்லாதவன் என்று கருதி, ஓட்டல் உரிமையாளன் அவனை வெளியேறச் சொல்லிவிட்டானாம்! சில திங்களுக்கு முன்பு வரையில், சிங்கார மயமான அரண்மனையிருந்தது, அவனுக்கு. அதிகாரிகள் புடைசூழப் பவனிவந்தான். 'இங்கு வருவாரா' என்னை மதிப்பாரா!!' என்று தவங்கிடக் கிடந்திருப்பான், பனாமா நகர ஓட்டல் முதலாளி. ஆனால், அரசபதவி இழந்து, அர்ஜென்டைன மக்கள் அடித்து விரட்டியபிறகு, ஒண்ட இடம்தேடி, ஒவ்வொரு இடமாக அலைந்து கொண்டிருக்கும் அவனை, ஒரு ஓட்டல்காரன்கூட விரட்டியடிக்கிறான்! ஜான்பிரானின், சர்வாதிகார வாழ்க்கையை அறிந்தோருக்கு உண்மையில் திகைப்பாகக்கூட இருக்கும், இச்செய்தி.

*

ஜான்பிரானைப்போல, பதவியிலிருந்தபோது படாடோபமாக வாழ்ந்து அந்த ஆசனத்தை விட்டிறங்கியதும் அனாதைகளாகப் போனோர், சரித ஏட்டில் ஏராளம் உண்டு! இப்போது சரிதங்களைக் கூடப் படிக்கவேண்டியதில்லை—நம் வாழ்நாளிலேயே நிகழ்ந்திருக்கும் சம்பவங்கள் கொஞ்சமா? எங்கே போனான் இறுமாந்துகிடந்த எகிப்து நாட்டு மன்னன் பரூக், அரசனாக அவன் இருந்தபோது, அடிபணிந்தோர் ஏராளம். ஆனால்! இன்று, அவனுடைய வாழ்க்கையை அடிப்படையாகவைத்து, பெயரைமட்டுமாற்றி "King Abdullathegreat" என்றுஒருதிரைப்படமே பிடித்துக் காட்டுகிறார்கள்!

*

பரூக் மன்னனென்ன? இன்று பாரதத் தலைவர்களின் கரங்களைக் குலுக்கிய வண்ணம் பவனி வந்து கொண்டிருக்கிறாரே, துணைவியாருடன்; பாரசீக ஷா, இவருக்கு என்னகதி நேர்ந்தது இரண்டாண்டுகளுக்கு முன்பு. ஈரான் நாட்டை விட்டே, ஓடி ஒளிய நேர்ந்தது! அப்போது, பாரசீக நாட்டு விடுதலை வீரன் என்று கொண்டாடப்பட்டவன் முஸாதிக். அவனுடைய வீர தீரத்தைப் பாராட்டினார்கள், பாரதத் தலைவர்கள். இன்று அத்தலைவனால்விரட்டப்பட்டமன்னரின் கரத்தைக் குலுக்குகிறார்கள்!

*

இப்படி, ஆட்சியிலிருப்பவன் கரத்தைக் குலுக்கி, ஆனந்தம் தேடுவது இதுதான் முதல் முறை எனக் கருதாதீர்கள். அவர்களோடு ஒட்டி, உறவாடி, உண்டு, மகிழ்ந்து, குலவிய ஷேக் அப்துல்லா, எங்கே? பாரதத் தலைவர்களே, அவரைச் சிறைக்கனுப்பிவிட்டு, சிங்காரமாகக் காஷ்மீருக்குப் போவதும்வருவதுமாக இருக்கிறார்கள்! ஆண்டுகள் ஓடுகின்றன—அவரை விடுதலை செய்யும் எண்ணம் கூட எழும்பவில்லை, இவர்களுக்கு!!

*

சுதந்திரம் வருமுன்னர், இன்று பார்மோசாத்தீவிலிருக்கும் சியாங்கே ஷேக்கை இந்தியாவுக்கு அழைத்து கூடிக் குலவியவர்கள் தான் நேருவும் சகாக்களும்! இன்று யார், சீந்துகிறார்கள் சியாங்கே ஷேக்கை? அழுது, புலம்பிய வண்ணம் பார்மோசாவிலிருந்து ஓலமிட்டுக் கொண்டிருக்கிறார்.

*

ஒரு வேடிக்கை தெரியுமா! "பார்மேசா சியாங்கேஷேக்குக்கும்சொந்தமல்ல; சென்சீனாவுக்கும் உரிமையுடையது அல்ல. எங்களுடையதுதான்" என்று ஜப்பானிலேயுள்ள சிலர் கடந்த 28-ந்தே டோக்யோவில் தெரிவித்திருக்கிறார்கள் அதோடு விட்டார்களா? பார்மோசாவை ஆள ஒரு தற்காலிக அரசாங்கத்தையும் நிறுவியிருக்கிறார்கள்! ஐந்துபேர்கொண்ட மந்திரிசபையும் அமைக்கப்பட்டுவிட்டது. தலைவர் பெயர் டாக்டர் லியோவென்சி என்பதாம். ஜப்பான், ஹாங்காங், முதலிய இடங்களிலிருக்கும் எண்பது லட்சம் பார்மோசாக்காரர்களுக்கு நாங்கள் பிரதிநிதிகள் என்று அவர்கள் அறிவிப்பதோடு தங்கள் கோரிக்கையை நிலைநாட்ட ஐ. நா. சபைக்குப் போகப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

*

இப்படியாக, இப்போது அரசியல் வானில் ஏற்படும் மாற்றங்கள், எண்ணிப் பார்ப்பதற்குக்கூட நேரமளிக்காமல், திடீர் திடீரென்று எதிர்பாராத சம்பவங்களை உண்டாக்கிவிடுவதைப் பார்க்கும்போது எங்கெங்கே, என்னென்ன மாற்றங் உருவெடுத்துவிடுமோ என்று எவராலும் 'ஆரூடம்' கணித்துவிட முடியாது.

*

இன்று பராரி, நாளை பாராளும் நிலைபெறுகிறான். நேற்று அரசன் இன்று ஆண்டிக்கோலத்தில்! ஊர்வன பறக்கின்றன! பறப்பன சிறகொடிந்துசின்னபின்னமாகின்றன!

★

## அரித்துவாரத்தில்!

வருகிற ஏப்ரல் திங்களில் அரித்துவாரம் என்ற இடத்தில் ஒரு கும்பமேளா நடக்க இருக்கிறதாம். அந்த மேளாவுக்குக்குறைந்ததுபன்னிரண்டு லட்சம் மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறதாம். எனவே அதற்காக 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம். யாரால் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று கேட்கிறீர்களா? வேறு யாராய் இருக்க முடியும்—சர்க்காரைத் தவிர! உத்தரப் பிரதேச சர்க்கார்தான் பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து இருபது இலட்சம் ரூபாயை இந்த மேளாவுக்கு ஒதுக்கியிருக்கிறது. ஏன் என்று கேட்கிறீர்களா? மதச்சார்பற்ற சர்க்கார் என்பதை விளக்க!!

★

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 36
11-3 56

# 'பட்ஜட் வாங்கலையோ!'

"அடாது, அன்பர்களே, கூடாது. நாட்டு மக்களின் ரட்சகனாயிருப்பேன் என்பதாக என்றைய தினம் பிரமாணம்' செய்து கொடுத்துவிட்டு பீடம் ஏறினேனோ, அன்று முதல் என் வாழ்வில் பொறுப்புள்ளவன் ஆனேன் என்று பொருள். சிறு தவறு நேர்ந்தாலும், அதன் விளைவுகளை, வரி செலுத்தும் மக்கள்தான் அனுபவிக்க நேரும்; ஆதலால்தான், அமைச்சர் பதவி ஏற்பவர்களுக்கு பொறுப்பும் அதனைச் சரிவர நடத்தும் திறமையும் தேவை என்கிறார்கள். திறமையும், பொறுப்பும் என்னிடம் இருந்திருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியாமலேயே என்னுடைய இலாகாவில் தவறு நேர்ந்துவிட்டது. தவறுக்குக் காரணம், நானல்ல! ஒரு அதிகாரிதான்! நன்றாக அறிவீர்கள், நீங்கள். ஆனாலும், அதைக் காரணமாகக் காட்டித் தப்பித்துக்கொள்ள விரும்பவில்லை, நான். ஏனெனில், அந்தத் தவறால், பாதிக்கப்படப் போகிறவர்கள் மக்கள். அந்த மக்களின் ரட்சகனாகக் கருதப்படும் மந்திரி நான். ஆகவே, தவறுக்கு நான்தான் பொறுப்பாளி. என்னை, மன்னித்துவிடுங்கள். இவ்வளவு அஜாக்கிரதையான நான் அமைச்சனாக இருப்பது, தவறு, வெட்கப்படுகிறேன். இந்த நிமிடமே என்னுடைய பதவியை ராஜினாமா செய்கிறேன்,'' என்று பார்லிமெண்டுக்கு முன் விளக்கம் தரக்கூட விரும்பவில்லை; தவறு நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டதும், தன்னுடைய பதவியைத் துறந்தார், அவர்.

இயல்பாகவே, பதவி ஆசையும் படாடோபமும் கொண்ட பிரபுக்களின் கூடாரம் என்று கூறப்படும் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர், அவர்; சர்ச்சிலின் சகா! வாசகமும், வாதத் திறமையும்கூடத் தேவையில்லை, தன் மீது குற்றமில்லை என்று நிரூபிக்க. தவறிழைத்தவர், ஒரு சாதாரண அதிகாரி என்பதை அனைவரும் அறிவர். ஆயினும், அந்தச் சந்தினைக் காட்டி, பதவியைக் காப்பாற்றிக் கொள்ள முனையவில்லை, உடனே விலகிவிட்டார்.

அமைச்சர் பதவி என்றால், பங்களா வாசமும் படாடோபமுமான வாழ்வும் நிரம்பியது அல்ல, பொறுப்பும் சிறப்பும் மிக்கது என்னும் புனிதமான கோட்பாடு, இப்படிப்பட்டவர்களால்தான் இங்கிலாந்தில், காப்பாற்றப்பட்டு வருகிறது.

1954ல், நடைபெற்ற இந்தச் சம்பவத்துக்கு ஆளான லிட்டில்டன் என்பார், சர்ச்சிலுக்குத் தோழர்; அவருடைய தலைமையிலுள்ள சர்க்காரில் மந்திரியென்றால், சர்ச்சில் அவர் விலக வேண்டி நேருவது குறித்து, எவ்வளவு வருந்தியிருக்கவேண்டும். ஆனாலும், மறுப்புரைக்காமல், தன்னுடைய செல்வாக்கைக் கைக்கொண்டு தவறை மறைக்க முயலாமல் உடனே விலகல் கடிதத்தை ஒப்புக்கொண்டார்.

சர்க்காரை ஏற்று நடத்துவதிலுள்ள புனிதத் தன்மையை நிலைநாட்டுவதற்காக, விலகிக் காட்டியவர், அங்கே.

இங்கே! இதோ, கடந்த சில தினங்களாக, விசித்திரமான காட்சியொன்றைக் காண்கிறோம்.

டில்லி நிதியமைச்சர் சிந்தாமன் 'தேஷ்முக் சமர்ப்பித்த 'பட்ஜட்', இரகசியம் அம்பலமாகிவிட்டது. பம்பாய் வீதிகளிலே, 'பட்ஜட் வாங்கலையோ, பட்ஜட்!,' என்று கூறி விற்றார்களாம். பார்லிமெண்டு முன், தன்னுடைய அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை அமைச்சர் வெளியிடவில்லை, இன்னும். ஆனால், அவர் வெளியிட இருக்கிற விஷயங்கள் யாவும் விலை கூறி விற்கப்பட்டது வீதிகளில்!!

இப்படி முன்னதாகவே 'பட்ஜட்', அம்பலமாகி விட்டதால், பம்பாயிலுள்ள பணக்காரர்கள், ஏராளமான ஆலைத் துணிகளைப் பதுக்கி விட்டனராம். ஏனென்றால், ஆலைத் துணிக்கு வரி விதிப்பதாக, பட்ஜட்டில் இருக்கிறதல்லவா, அப்படி வரி விதித்தால் துணியின் விலை உயருமல்லவா, உயர்ந்த விலையில் விற்றால் லாபம் கிடைக்குமல்லவா, அதனால். இப்படி, பணக்காரர்களும், பிறரும் செய்துவிட ஏதுவாகயிருந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் பட்ஜட் அவ்வளவு இரகசியமாக இருக்க வேண்டும் என்று கருதப்பட்டு வருகிறது.

இங்கிலாந்து நாட்டில் முன்போர்முறை, இங்கு போலவே, பட்ஜட் இரகசியம் வெளிவந்துவிட்டதாகக் கூறப்பட்டது. உடனே, அப்போது அங்கு நிதியமைச்சராகப் பணியாற்றியவர், லிட்டில்டனைப் போலவே, விலகல் கடிதம் அனுப்பினார்; பதவியைத் துறந்தார்.

ஆனால், நமது சிந்தாமண் தேஷ்முக், பார்லிமெண்டிலே விளக்கங்கள் அளிக்கிறார்; அவரது தலைவரான பிரதமர் நேரு பண்டிதர், "இந்த இரகசியம் வெளியானதால், சர்க்காருக்கு ஒன்றும் அவ்வளவாக நஷ்டம் ஏற்பட ஏதுயிருப்பதாக நான் கருதவில்லை!' என்று பூசி மெழுகுகிறார். அதிகாரியின் சிறு தவறுக்காக விலகல் கடிதம் கொடுத்த லிட்டின்டன் அங்கே. தவறு தன்னுடையதெனத் தெரிந்தும் விளக்கம் தரும் நிதி அமைச்சர் இங்கே!!

நேரு பண்டிதருக்கு எப்படி தேஷ்முக் வேண்டியவரோ, அதுபோல லிட்டில்டன்னும், சர்ச்சிலுக்குற்ற நண்பர்தான். ஆயினும், நண்பருக்காக சர்ச்சில் வாதாடவில்லை; நமது நேரு பண்டிதரோ, சமாதானம் கூற முன்வருகிறார்.

பிரச்சினை எவ்வளவு பெரியது—பட்ஜட் இரகசியம் வெளியாவது, சர்க்காருக்கே இழுக்கல்லவா—என்று பார்லிமெண்டில் சுட்டிக்காட்டிய தோழர் காமத், இங்கிலாந்து நாட்டில் எவ்வண்ணம் இது போன்ற விஷயங்களைச் சர்க்கார் கருதுவர் என்பதனையும் எடுத்துரைத்திருக்கிறார்.

ஆயினும், நமது தேஷ்முக், இருந்த இடத்தை விட்டு 'இம்மி'யும் நகரவில்லை; இன்னும் அமைச்சராகவே இருக்கிறார். எப்படி இந்த இரகசியம் வெளியாயிற்று என்பதைக் கண்டுபிடிக்க சர்க்கார் தீவிர புலன் விசாரணையிலீடுபட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலன் விசாரணை நடைபெறவேண்டியதுதான். ஆனால், அதற்கு முன்னதாக, அமைச்சர் தேஷ்முக், தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்து

ஜனநாயகத்தின்பாலுள்ள நம்பிக்கையைக் காட்டிக் கொண்டிருக்கவேண்டும்.

பம்பாய் வீதிகளில் பட்ஜட் விலை கூறப்படும் விபரம், சர்க்காருக்குத் தெரியாமலிருந்ததோ என்றால் பட்ஜட் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பே தெரிந்திருக்கிறது. பம்பாய் போயிருந்த டில்லி மந்திரியார் ஒருவரிடம், பம்பாய் முதலமைச்சரே, விலை கூறப்பட்ட ஒரு பிரதியைத் தந்திருக்கிறார். அப்படி முன்கூட்டித் தெரிவிக்கப்பட்டிருந்தும், சர்க்கார் ஆவன செய்யவில்லை.

இப்படி, 'பட்ஜட்' அம்பலமானதும் அமைச்சர், தன் பதவியை விட்டு விலகி, தான் ஏற்றிருந்த பொறுப்பின் சிறப்பினை விளக்கியிருக்கவேண்டும். ஏதோ, சபலத்தால் அப்படிச் செய்யத் தாமதித்தாலும், உலகுக்கே 'ஜன நாயக'த்தின் சிறப்புகளைப்பற்றி, பிரசங்கமாரி பொழியும் நேரு பண்டிதர், அவரை வலியுறுத்தி, தன்னுடைய சர்க்காரின் நேர்மையையும் கண்ணியத்தையும் உலகுக்குக்காட்டிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வண்ணம் ஏதும் செய்யப்படவில்லை-ஒருவேளை, ஏளனமும் எதிர்ப்பும் அதிகமானால் நடைபெறுமோ, என்னவோ! — இதுவரையில், அது குறித்து நேரு கவனம் செலுத்தியதாகத் தெரியக்காணோம்—தீவிர விசாரணையில் சர்க்கார் ஈடுபட்டிருப்பதாக மட்டும் தெரிய வருகிறது.

இவ்வண்ணம் தேஷ்முக் விஷயத்தில் பூசிமெழுக முயலும் "இந்திய ஜோதி"யைப் பற்றி எண்ணுகையில் மறைந்த பேரறிஞர் சர். ஆர். கே. சண்முகனாரின் நினைவு வருகிறது. அவர், டில்லியில் நிதி அமைச்சராக இருந்த காலத்தில், தெரிந்தோ தெரியாமலோ வேண்டியவர் ஒரு வருக்குச் சகாயம் செய்ததாகப் புகார் வந்தது. சண்முகம், அந்தப் புகாரின் அடிப்படையில் தன்னுடைய பதவியை விட்டு விலகினார், "வளரும் ஜன நாயகத்துக்கு ஒரு உதாரணமாயிருக்க விரும்புகிறேன்'' என்று தெரிவித்து. அதுபோது, இதுதான் நேர்மை—கண்ணியம்—என்று வான ளாவப் பேசியவர்தான், நேரு! ஆனால், தேஷ்முக்கை வெளியே அனுப்பமட்டும் அந்த நேர்மையும் கண்ணியமும் மனதில் வர மறுக்கிறது போலும்!

சர்க்காரின் வரவு செலவுத் திட்டங்கள் ஆங்கிலத்தில் மட்டும் உறுப்பினர்களுக்கு அச்சடித்து அளிக்கப்படுவது, பழைய முறை. ஆனால், இப்போது ஆங்கிலத்தில் மட்டுமின்றி இந்தியிலும் அளிக்கப்படுகிறதாம். அதனால் மொழி பெயர்க்க ஒரு ஆள் தேவைப் படுகிறதல்லவா? அதன் மூலம், இரகசியம் வெளியாகியிருக்குமோ, என்று எண்ணவும் ஏது இருக்கிறது. அது எப்படியிருந்தாலும், இரகசியம் வெளியான விஷயங்களைப்பற்றிக் கண்டு பிடித்து பிறகு வெளியிட்டாலும், உலகின் பார்வையில் தங்களுடைய பொறுப்பின் சிறப்பினை, உணர்த்திக் கொள்ளத் தவறிவிட்டது, நேரு சர்க்கார்.

வேறு யாராவது இருந்து இப்படி 'பட்ஜட்' இரகசியம் அம்பலமாகியிருக்குமானால், இந்நேரம் நமது தேசீய ஏடுகள் சீறும்; பாயும். ஆனால், இதுபோது, வாய்மூடி மௌனியாகயிருப்பதுதான் விந்தையாக உள்ளது! இரண்டாண்டுகளுக்கு முன்பு சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடாத்திய 'இன்டர்' வகுப்புத் தேர்வுக் கேள்வித் தாள் வெளியானபோது ஏடுகள், எப்படியெப்படிச் சீறின துணைவேந்தர் லட்சுமணசாமி மீது என்பது பலருக்கு கவனமிருக்கும், 'பொறுப்பை நிறைவேற்றத் தெரியாத இவர் உடனே விலக வேண்டும்,' என்று கூடப் பேசப்பட்டது. ஒரு பரீட்சைத் தாள் வெளியானதற்கு, அதுவும் உடனே வேறொரு பரீட்சைத் தாள் தயாரித்து பரீட்சைகள் நடத்தப்பட்டன என்று தெரிந்தும் அப்படிச் சீறினார்கள். இப்போது, நாட்டின் வரவு செலவுத் திட்டம்—முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் திட்டம், பகிரங்கமாகி, ஒரு சிலர் பொருள்களைப் பதுக்கவும், முன்னெச்சரிக்கை பெற்று ஆவன செய்து கொள்ளவும் வசதி செய்திருக்கிறது. அதைப்பற்றித் துளிகூட மூச்சுப் பேச்சில்லை, எங்கும். அது தான், விந்தையாயிருக்கிறது. ★

# வான்கோழியின் வம்பு!

*அதைப் பாராட்டுகிறார்களே, நாமும் அப்படி நடை பழகலாம் என்றெண்ணி நையாண்டிக்கு ஆளான வான்கோழியின் கதை தெரியும் உங்களுக்கு!—அதனை நினைவூட்டுகிறது, அண்மையில், டில்லி ரயில்வே நிர்வாகம் செய்ய இருக்கிற ஒரு மாற்றம்.*

*காலஞ் சென்ற கோபாலசாமி அய்யங்கார் அமைச்சராகயிருந்த வேளையில், 'இண்டர்' வகுப்புகளை 'இரண்டாம் வகுப்பாக்கியும்' 'இரண்டாம் வகுப்புகளை முதல் வகுப்பாக்கியும்' அடிக்கடி மாறுதல்கள் செய்யப்பட்டதையும், அதனை நாட்டின் நல்லோர் இடித்துரைத்ததையும் எல்லோரும் அறிவோம். இந்தமாற்றங்களின் காரணமாக, மக்களின் வரிப்பணம் வீணாகிறதென தேசிய ஏடுகளே, கேலிச் சித்திரம் தீட்டிக் கிண்டல் செய்தன.*

*இப்போது, மீண்டும் ஒரு மாறுதல் செய்யப்போவதாக டில்லி அறிவிக்கிறது. அதன்படி, இப்போது 'மூன்றாம்' வகுப்பு என்று இருப்பதை 'இரண்டாம்' வகுப்பாக்கப்போகிறார்களாம். தரத்தில் அல்ல; பெயர்மட்டும், அந்த வண்டிகளில் மாற்றி எழுதப்படும். அவ்வளவு தான்!*

*வர்ணமும் கோலும்கொண்டு இப்படி எழுதி விட்டால் மாறுதலாகிவிடுமோ, மக்கள் தமது 'தரம்' உயர்த்தப்பட்டுவிட்டதாக எண்ணி ஏமாந்துவிடுவரோ, என்று கேட்டால், டில்லியினர் பதில் தருகிறார்கள், "மூன்றாம் வகுப்பு, என்று இருப்பது ஒருவித தாழ்வு உணர்ச்சியை உண்டாக்குகிறது. சோஷியலிச பாணிக்கு அது உகந்தது அன்று. ஆகவே, இவ்வண்ணம் செய்கிறோம்" என்பதாக. வான்கோழிதான். ஆனால் வண்ணம் பூசப்படும் அதை மக்கள் மயில் என நினைத்துக்கொள்ளவேண்டும்.*

*ரஷ்யா, போன்ற இடங்களில் சமத்துவத்தை இப்படிப்பட்ட 'மாறுதல்'களால் அல்ல உண்டாக்கியிருப்பது; உண்மையாகவே, ஒரே வகுப்பு வண்டிகள் மட்டும் உள்ளன; அவைகளில் எல்லாருக்கும் ஒரே விதமான வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. ரஷ்யாவைப் போல, 'ஐந்தாண்டுத் திட்டம்' போட்டு தன் கீர்த்தியைக் காட்டிக்கொள்ள விரும்பும் சர்க்காருக்கு அடிப்படையை மாற்றியமைக்கும் திறனில்லை. வெறும் பெயர்களை மட்டும் எழுதுகிறது. அதன் மூலம் தானும் ரஷ்ய மாடலில் செல்வதாகக் காட்டிக்கொள்ள முயல்கிறது! விரயம் ஆவதோ நம் வரிப் பணம்.*

# தலைவரின் தோற்றம்!

அந்தப் பதினொரு வயதுப் பெண்ணுக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை, துணிந்து ஒரு கடிதம் எழுதி அனுப்பினாள்.

நாட்டுக்குத் தலைவர், நல்லவர், ஏழை எளியோரின் நண்பர், இருந்தும், அவருடைய தோற்றம் கவர்ச்சிகரமாக, கண்டதும் மனதிலே நிலைக்கத்தக்கதாக இல்லையே, ஏன்? என்று அந்தச் சிறுமிக்குக் கவலை பிறந்தது.

நாட்டுக்குத் தலைவராக வந்துள்ளவரின் தோற்றத்தை என்ன செய்தால் கவர்ச்சிகரமானதாக்க முடியும் என்பது பற்றி அந்தப் பெண் சிந்தனை செய்துகொண்டிருந்தபோது, **ஆபிரகாம்லிங்கன்** அமெரிக்கக் குடியரசுத் தலைவராக, மக்கள் மனமுவந்து தேர்ந்தெடுத்திருக்கிறார்களே, மக்களின் நலனுக்காக எவ்விதமான திட்டங்கள் தீட்டலாம், எப்படி அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என்பதுபற்றி சிந்தித்துக்கொண்டிருந்தார்.

எத்தனை முறை, ஆபிரகாம் லிங்கனுடைய படத்தை அந்தச் சிறுமி பார்த்தாளோ, அவருடைய தோற்றத்திலே குறைபாடு இருக்கிறது என்பதுபற்றி என்னென்ன எண்ணினாளோ தெரியவில்லை. அவள் ஓர் முடிவுக்கு வந்தாள்.

ஆபிரகாம்லிங்கனும் ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருந்தார் — நாட்டுப் பிரச்சினை குறித்து. அடிமைமுறை ஒழிந்தாகவேண்டும் — அனைவரும் மனிதரே என்ற மாண்பு நிலைத்தாக வேண்டும் என்பதே அவர் கொண்ட முடிவு. அமெரிக்காவுக்கே களங்கமாக, கறையாக இருக்கிறது அடிமை வியாபாரம்— நீக்ரோக்களைக் கொடுமை செய்து வருகிற வரையில், அமெரிக்காவை ஒரு நல்லாட்சி உள்ள நாடு என்று அறிவாளர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், என்று உறுதியாக நம்பத் தொடங்கினார். களங்கத்தைப் போக்க வேண்டும், கறையைத் துடைத்திட வேண்டும், அமெரிக்காவின் மாண்பு அழகொளியாக வீசவேண்டும் என்று எண்ணினார்.

ஆமாம், அப்போதுதான் அவர் முகம், கவர்ச்சி அளிக்கும் இப்போது, எலும்பு தூக்கிக்கொண்டு நிற்கிறது—முகத்திலே அதனாலே தான் கவர்ச்சி இல்லை—என்று அந்தப் பெண் கண்டறிந்தாள். ஆபிரகாம்லிங்கன், அந்தப் பெண் கண்டறிந்ததுபோல, எலும்பு முகத்தோனாகத்தான் இருந்து வந்தார்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்; உழைத்து உயர்பதவியில் வந்தமர்ந்தார், எனினும், செல்வச் சூழ்நிலையில் அவர் ஈடுபடாததால், மினுமினுப்பும் பளபளப்பும் அவரிடம் இல்லை.

உழவன், மாடுகளைத் தொழுவத்தில் கட்டிவிட்டு, எஜமானனுடைய சட்டையை மாட்டிக்கொண்டு பட்டணம் பார்க்கப்போனால் எப்படி இருக்குமோ, அதுபோலிருந்தார் என்று கூறலாம்.

## ★ முகப்பு விளக்கம் ★

பார்த்தால், மனதிலே சிலருடையஉருவம் அப்படியே பதிந்து விடும்—அற்குக் காரணம், மற்றவர்களிடம் இல்லாத ஏதேனும் ஓர் சிறப்புக்குறி அவர்களுடைய தோற்றத்தில் இருக்கும்—அல்லது செயலில் காணப்படும்.

அதுபோல, ஆபிரகாம்லிங்கனுக்கு அமையவேண்டும் என்பது சிறுமியின் எண்ணம்.

ஆமாம், அதுதான் சரி என்று ஓர் முடிவுக்கு வந்தாள்.

**அன்பு சால் தலைவ!**

**தங்கள் தோற்றத்தில் ஓர் புதுப் பொலிவு காண விழைகிறேன். அதன்பொருட்டு தாங்கள் சிறிய அளவில் 'தாடி' வளர்த்துக் கொண்டால், நல்லது என்று எண்ணுகிறேன் தயவுசெய்து, என் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கோருகிறேன்.**

இந்தக் கருத்துப்பட தனக்கு அந்தச் சிறுமி எழுதி அனுப்பிய கடிதத்தைக் கண்டுவிட்டு, ஆபிரகாம்லிங்கன் எப்படி எப்படிச் சிரித்திருப்பாரோ! நாட்டை எதிர்நோக்கியபடி எத்தனை பிரச்சினைகள் உள்ளன, நான் ஆற்றவேண்டிய கடமைகள் எத்தனை எத்தனை! இந்த வேடிக்கைக்காரப் பெண், என்னைத் 'தாடி' வைத்துக்கொள்ளச் சொல்லுகிறாளே — அந்த வேலையை அல்லவா நான் முதலில் கவனிக்கவேண்டுமாம்! குறும்புக்காரக் குட்டி! என்று எண்ணிக் கொண்டார்.

இத்தனை நாளும் இல்லாமல் மீசை தாடிவைக்க ஆரம்பித்தால், ஊரார் என்ன சொல்லுவார்கள்! ஓஹோ! ஆபிரகாமுக்குத் 'தலைக்கனம்' என்று கூடத் தூற்றுவார்களே, சிலர். செச்சே! நமக்கேன், தாடியும் மீசையும்!—என்று தனக்குள் கூறிக்கொண்டார்.

உள்நாட்டுப் போருக்கான 'வாடை' அடித்துக்கொண்டிருந்த நேரம் — பல முக்கியமான பிரச்சினைகள் லிங்கனுக்கு — அவருடைய அலுவலகத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் காத்துக்கொண்டிருந்தனர், அவருடைய யோசனை

களைக் கேட்டுக் காரியமாற்ற. அத்தகைய சூழ்நிலையிலும், 'தாடி'வைத்துக்கொண்டு, தோற்றத்தில் புதிய பொலிவு பெறவேண்டும் என்று கடிதம் எழுதிய கிரேஸ் பிருடல் எனும் சிறுமிக்கு, ஆபிரகாம் பதில் எழுதத் தவறவில்லை.

இதுநாள்வரையில் இல்லாத 'தாடிமீசை'யை நான் வைத்துக் கொண்டால் ஊர்மக்கள் ஒருமாதிரியாக எண்ணிக்கொள்ளுவார்கள் இது சரியாகுமா? என்று கடிதம் எழுதினர்.

கடிதம்தான் இதுபோல எழுதினரே தவிர, ஒருமாதத்துக்கெல்லாம், லிங்கன், தாடி மீசை வளர்த்துக் கொள்ளலானர்.

சிறுமி கூறியதுபோலவே, ஆபிரகாம் லிங்கனுடைய தோற்றத்திலே புதிய பொலிவு தெரியலாயிற்று கண்டவர் மனதில் பதியும் உருவம் கிடைத்தது மட்டுமல்ல— இன்றும் ஆபிரகாம் லிங்கன் பற்றி எண்ணும்போது, தாடி மீசை, வைத்திருக்கும் லிங்கன் உருவம் தான் யாருடைய மனக் கண்ணிலும் தெரியும்.

அமெரிக்கக் குடி அரசுத் தலைவர்களிலே 'தாடி மீசை' கொண்டவர் ஆபிரகாம் லிங்கன் தான்.

பதினெரு வயது சிறுமியின் பரிவான கடிதமே அதற்குக் காரணம்.

கடிதம் கிடைத்த 'அந்த நாள்' லிங்கனுடைய வாழ்க்கையிலே ஓர் புதிய கட்டத்தைத் துவக்கிய நாளாகிவிட்டது. தலைவரின் புதிய தோற்றம் தொடக்கமாயிற்று.

ஆபிரகாம்லிங்கன் வாழ்க்கையில் இதுபோலவே ஒவ்வொரு சம்பவமும், எதிர்பாராத நிகழ்ச்சிகள் — எனினும் அவை ஒவ்வொன்றும், அவருடைய வாழ்விலும் அதன் பயனக அமெரிக்க நாட்டவர் வாழ்விலும், முக்கியமான திருப்புமுனைகளாயின!

'தாடி மீசை' வைத்துக்கொண்டு ஒருவர் குடி அரசுத் தலைவராகக் கொலுவீற்றிருப்பார் என்று முன் கூட்டி யாருக்குத் தோன்றி இருக்க முடியும்.

ஆபிரகாம் லிங்கன், குடி அரசுத் தலைவராக வரக்கூடியவர் என்று மட்டும், யார் எண்ணியிருந்திருக்க முடியும்!

எளிய குடும்பத்தில் பிறந்தவர்; ஏதோ 'இரண்டெழுத்து' கற்றுக் கொண்டு, பாடுபட்டுப் பிழைக்கலாம் என்ற அளவு நோக்கம் கொண்டிருந்தவர்,

அரசியல் தலைவர்களை அழைத்து விருந்து வைபவம் நடத்திடும் செல்வச் சீமானின் மாளிகையில் பிறந்தவரல்ல லிங்கன்.

நுட்பமிகுந்த அரசியலுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்று எண்ணி, 'கஷ்டஜீவனம்' செய்து வந்த குடும்பத்தில் பிறந்தவர். எனவே, லிங்கனுடைய சிந்தனையை அரசியல் பிரச்சினைகள் கவரவில்லை —செவியிலே அரசியல் பிரச்சினை குறித்த விவாதங்களேனும் சிறு வயதிலே விழுந்திருக்குமா என்பதே சந்தேகம். அப்படிப்பட்ட நிலையில் துவங்கிய அவர் வாழ்க்கை அமெரிக்க அரசியல் வரலாற்றுக்கே மிக முக்கியமான சம்பவக் கோவையாகப் பிறகு விளங்கிற்று.

அடிமை முறையை ஒழித்த அஞ்சாநெஞ்சன் என்று அவனி கொண்டாடத்தக்க நிலைபெற்ருர் ஆபிரகாம்லிங்கன்.

அமெரிக்க நாட்டை உலுக்கிய, பயங்கரமான உள்நாட்டுப் போரில், வீரதீரமான வெற்றிபெற்ருர்.

அன்பு உள்ளம் கொண்டவர்கள் அறநெறி பேசியவர்கள், இரக்கம் என்பது பற்றிய இதோபதேசம் பேசினேர், ஏராளமாக இருந்து வந்தனர்.

மாதா கோயில்கள் இருந்தன, பாதிரிகள் நிரம்ப இருந்தனர். அவர்கள் சத்திய நெறிபற்றிச் சுவைபடப் பேசியும் வந்தனர்.

எனினும், மனிதனை மிருகமாக்கி அடிமையாக்கி கொடுமைப்படுத்தும் வழக்கமும் இருந்துவந்தது.

ஏன் என்று கேட்கவோ, எதிர்த்துப் பேசவோ, ஆயிரத்தெட்டுத் தர்மம்பற்றி அழகாக பேசி வந்தவர்களாலும் முடியவில்லை.

மாதா கோயிலுக்கு விலையுயர்ந்த 'மணி'களைத் தானமாக்கித் தருவர் ஆனல் அதே 'தருமப்பிரபுக்கள்' தமபோன்ற மனிதர்களை, அடிமைகளாக்கிச் சவுக்காலடிப்பர்!

தொழுநோய் பிடித்தோனிடமும் பரிவு காட்டிய 'தேவகுமாரன்' பற்றிய 'புண்யகாதை'யைக் கேட்டுப் புளகாங்கிதம் கொள்வர்; அதே போது, சவுக்கடியால் சதை பிய்க்கப்பட்ட இடத்திலிருந்து ஒழுகும் இரத்தத்தைத் துடைத்துக் கொண்டே அடிமை வேலை செய்யும் நீக்ரோக்களைக் கண்டு, குறுநகை புரிந்தபடி, "பயல், இனி அடக்க ஒடுக்கமாக இருப்பான்!" என்று பேசுவர்!

இந்த நிலையை மாற்றும் மனவலிவு கொண்டவர், ஆபிரகாம் லிங்கன், என்பதை எடுத்துக் காட்டத்தக்க விதமாக, அவர் தமது சிறுவயதில், பலப்பல அரசியல் பேசிக்கொண்டில்லை.

ஆனல் அவருக்கு ஒரு அரும் வாய்ப்புக் கிடைத்ததும், நீண்ட கால எளிய வாழ்வை மாற்றிக் கொண்டு போக போக்கியத்தில் புரளலாம், புன்னகை புரிந்திடப் பிரபுக்களும், கரத்தை முத்தமிட்டுக் கனிவு காட்டவும்,—விரும்பினல் கன்னத்தை அளிக்கவும் சீமாட்டிகளும் இருக்கிருர்கள், பட்டி தொட்டியில் சுற்றியது போதும் பகட்டுடை அணிந்து பட்டிணத்துக்காரராகிவிடலாம், என்று போய்விடாமல், தமது 'ஆட்சி' அமெரிக்க வரலாற்றுக்குக் கறையாக, மனிதத்தன்மையை மாய்த்திடும் பெரும் பழியாக இருந்து வரும், அடிமை முறையை ஒழித்துக் கட்டவேண்டும் என்று துணிந்து பாடுபட்டார், வெற்றியும் கண்டார்.

நீக்ரோக்கள் பிரச்சினை—அடிமை முறை— எவ்வளவு அழுத்தமாக அமெரிக்காவைப் பற்றிக்கொண்டிருந்தது என்பதை, இப்போதும் தலைகாட்டும் சிலபல சம்பவ மூலம் அறியலாம்.

ஒரு திங்கள் கூட முடியவில்லை ஒரு நீக்ரோ மங்கை கல்லூரியில் பயிலச் செல்வதுகண்டு, ஆயிரம் வெள்ளை மாணவர்கள் வெறிக் கூச்சலிட்டு, விரட்டிவிட்டிருக்கிருர்கள்.

1956-ல் இந்த நிலை என்ருல் அந்த நாட்களில், அடிமை முறையை எதிர்த்துப் பேசவும், எதிர்ப்புகளைச் சமாளிக்கவும், சட்டம் இயற்றவும், அதை வெற்றியுறச் செய்யவும் எத்துணை நெஞ்சு உரம் இருக்க வேண்டும்.

'தாடி'யுடன் புதிய தோற்றம் கொண்டுள்ள லிங்கன் ஓவியத்தை மீண்டும் ஒருமுறை ஏட்டின் முகப்பைத் திருப்பி, இப்போது பாருங்கள், அந்த நெஞ்சுஉரம் நன்கு தெரியும்.

இந்தத்தோற்றம் அவருக்கு முதலில் இல்லாதிருந்தது.

குறையைக் கண்டறிந்தாள் ஓர் குமரி—தலைவர் புதிய தோற்றம் பெற்ருர்.

★

# கொலுப் பொம்மைகள்!

ஆண்டுக்கொரு முறை அனைத்திந்திய தலைநகராம் டில்லியில் நடைபெறும் மாநிலக் கவர்னர்களின் மாநாட்டிலே, குடியரசுத் தலைவர் பிரசாத்தின் முன்னிலையில் கோலோச்சும் நேரு பண்டிதரின் எதிரில், கவர்னராயிருக்கும்டாக்டர் பட்டாபி சீதாராமையா, வெளியிட்டாராம், "மாகாணத்தின் முக்கிய விஷயங்களைப் பற்றிக் கூட, கவர்னர்களாக இருக்கும் நாங்கள் அன்றன்றுடப் பத்திரிகைகளில் படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில், என்ன செய்கிறோம், என்ன நடக்கிறது என்பதுபற்றி மாகாண அமைச்சர்கள் எங்களிடம் தெரிவிப்பதுகூட இல்லை" என்பதாக.

"ஐயா! செய்கிற காரியத்தை எங்கள் ஆலோசனைக்கு வைக்காவிட்டாலும், தெரிவித்து விட்டாவது செய்யக்கூடாதா?" என்று பரிதாபத்தோடு கேட்கிருர், பட்டாபி. அரசியல் சட்டத்தின்படி, மாநிலங்களை ஆளும் அரசுகள், சட்டசபைக்குக் கட்டுப்பட்டனவே ஒழிய, கவர்னருக்கு அல்ல. அவரைக் கேட்டுக்கொண்டுதான் காரியங்களைச் செய்யவேண்டுமென்பது அவசியமில்லை. அதனுல்தான்,கவர்னர் வேலையென்பது, பொறுப்பற்றது, எவ்வித சங்கடமும் இல்லாதது, கொலுவிலுள்ள பொம்மையைப் போலிருக்க வேண்டியது, என்று எல்லோரும் கருத்துத் தெரிவித்து வருகிருர்கள்.

ஜனநாயக முறையில், நாடு ஆளப்படும்போது, ஏனிப்படி ஒரு பொம்மை? — என்று, கேட்டால், டில்லியினர், சரிவரப் பதில் தருவது கிடையாது. வேண்டியவர்களுக்கு ஒரு 'சான்சு' தரவும், வெள்ளைக்காரர்கள் வாசம் செய்து விட்டுப்போன மாடமாளிகைகளை 'வலம்' வரவும், துப்புரவாக வைத்திருக்கவும் ஏற்பட்டதாகவே ஆகி வருகிறது, இந்தக் கவர்னர் பதவி. ஏதோ, ஆண்டுக்கு இரண்டொரு தரம், சட்டசபையை ஆரம்பித்து வைப்பது என்கிற பெயரால் சர்க்கார் காரியதரிசிகள் தயாரித்துத் தரும் அறிக்கையைப் படிப்பதைத் தவிர, வேறு வேலையே கிடையாது! மீதி நாட்களெல்லாம், விருந்துக்குச் செல்வது, வேடிக்கையாகப் பேசுவது, வேண்டியவர்களைக் கூப்பிட்டுவந்து சுற்றிக் காட்டுவது, இப்படி நடக்கிறது, வாழ்வு.

இதற்கு செலவழிவது, நம் வீட்டு வரிப்பணம்! ஆண்டு ஒன்றுக்கு பத்து இலட்சம், பிரகாசாவுக்கு மட்டும்!!

இந்த அக்கிரமம் அடுக்குமா என்று கேட்டால் காங்கிரஸ் 'கனம்'கள் வாயைத் திறப்பது கிடையாது. அப்படி யாராவது திறந்தாலோ, நாங்கள் என்ன செய்வோம்? மேலிடம் கவனிக்க வேண்டிய விஷயமல்லவா! என்று தட்டிக் கழித்து விடுகின்றனர்! அவ்வளவு எளிதாக இருக்கிறது, மக்களின் வரிப்பணத்தைக் கரைப்பது!

மேலிடத்திலிருக்கும் அதிகாரிகள்கூட இந்தக் கவர்னர்களை மதிப்பதில்லையாம். டில்லி மாகாண அபிவிருத்தி அமைச்சர் பிர்ம்ம பிரகாஷ் என்பவர் சொல்லுகிருர், மத்யசர்க்காரிலிருக்கும்அதிகாரிகள் கேவலம் ஒரு கிளார்க்கைப் போல நடத்துகிருர்களாம்! அங்கும்கவுரவமில்லை— இங்கும் மதிப்பில்லை— இருந்தும், பட்டாபியும் பிரகாசாவும் 'கவர்னர்'களாகயிருக்கச் சம்மதிக்கிருர்கள்! 'பண்நாதனுக்காக!! ஆனல், இப்படி மக்களின் வரிப்பணத்தை விரயம் செய்ய, அரசினர் மட்டும் ஏன் சம்மதிக்கவேணடும்? ஆண்டு ஒன்றுக்கு பத்து இலட்சம் போகிறதே!



வேலை எதுவுமற்ற இவர்களுக்காக ஒவ்வொரு மாகாணத்திலும் ஒதுக்கப்படும் தொகையை அந்தந்த மாகாணங்களில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்காகச் செலவிட வேண்டுமென்ற ஜனநாயகப் பண்பு இன்றைய சர்க்காருக்கு ஏற்படுவதற்கு, பட்டாபி சீத்தாராமய்யா போன்றவர்களின் இடித்துரை பயன்பட வேண்டுமென்று விரும்புகிறோம்.

கவர்னர்கள் தங்களுடைய பதவிக்குத் தகுந்த அதிகாரமும் மரியாதையும் தரப்படுவதில்லை என்று குறை கூறுவதைவிட, கவர்னர் என்ற பெயரால் ஒரு பதவியும், அதற்காக இலட்சக் கணக்கில் பண விரயமும் செய்வது தேவையும் அவசியமுமற்ற ஒரு டம்பாச்சாரித்தனம் என்று டில்லிக்கு உறைக்கும்படி உரைத்தால், அதில் அறிவுடைமை இருக்கிறதென்று கருதலாமேயொழிய, வறிதே, "நாட்டில் என்ன நடக்கிறதென்பது கவர்னர்களாகிய எங்களுக்குத் தெரியாமலேயே நடக்கிறது" என்று வெட்கம்கலந்த வருத்தத்தைத் தெரிவிப்பதால் நாட்டுக்கோ அல்லது அவர்களுக்கோ எந்த விதமான பயனும் ஏற்பட்டு விடாது.

கவர்னருக்குக் கொடுக்கப்படும் பத்து இலட்சம் ரூபாய்களுக்குச் சர்க்கார் தரும் செலவுப் புள்ளி விபரங்களைக் கவனித்தால், ஐயோ, இப்படியுமா பணம் பாழாக வேண்டும் என்று எண்ணுமல் இருக்க எந்த மனித அறிவு படைத்தவனும் சம்மதிக்க மாட்டான்.

எந்த மாடுகளைக் காட்டி ஓட்டு வேட்டையாடுகிருர்களோ, அந்த மாடுகள் கூடக் கண்ணீர் வடிக்கும் —கவர்னருக்கு அழும் தொகையை கேட்டு. ஆனல், 'கனம்'களுக்கும், காமராஜருக்கும் தான் இதெல்லாம் மிகச் சிறிய விஷயமாயிருந்து வருகிறது!!

★

# தண்டோரா சர்க்கார்!

## (3)

**தம்பி!**

ஏன் நான் உயரமாக இருந்திருக்கக்கூடாது என்ற எண்ணம் எனக்கு பிப் 20-ல் ஏற்பட்டதென்று சென்ற கிழமை கூறினேனல்லவா! காரணம் என்ன தெரியுமா? அன்று சென்னையில், அதுநாள் வரையில் கண்டிராத மகத்தானதோர் ஊர்வலம் நடைபெற்றது, அதிலே கலந்துகொள்ளும் அவசியம் எனக்கு வந்துற்றது! எதிரே என்ன நிலை, பின்புறம் என்ன நிலைமை, பக்க வாட்டங்களிலே எப்படி இருக்கிறது என்பவைகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள ஆவல் கொண்டேன்; ஆனால் நான் தான் குள்ளமாயிற்றே—என்னால் நிலைமைகளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இன்னும் சிறிதளவு உயரமாக இருந்தால், ஊர்வலத்தின் போக்கையும் சரியாகத் தெரிந்துகொள்ள முடியும், நிலைமைக்குத் தக்கபடி, தோழர்களை நடத்திச்செல்லவும் முடியும் என்று எண்ணினேன். எண்ணி என்ன பயன்? வருத்தப்பட்டேன்!

ஊர்வலம் என்றாலே எனக்கு பிடிக்காது என்பதையும், நமது கழகத்தோழர்கள் ஆர்வத்துடன் அவ்வப்போது நடத்தும் உற்சாகமான ஊர்வலத்தின்போது, என்னைத் தேடிப் பிடித்திழுத்து வந்தாலும், நான் ஓடி ஒளித்துக் கொள்பவன் என்பதும் உனக்குத்தெரியும். அப்படிப்பட்ட சுபாவமுள்ள நான, அன்றையஊர்வலத்தை நடத்திச்செல்பவர்களில் ஒருவனாக வேண்டி நேரிட்டது.

ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கினார் பி. டி. ராஜன், உடனிருந்து நடத்திச் சென்றார், ம. பொ. சி.

நமது பொதுச்செயலாளர் ஊர்வலத்தில், படைத்தலைவர், தமது படைவரிசைகளைஒழுங்குறநடத்திச் செல்லும் பான்மையில் சென்றார்.

நானோ, தம்பி! திகிலும்திகைப்பும் கொண்ட நிலையில், இவ்வளவு திரளான மக்கள், எதைக்கண்டுகோபம் கொண்டு விடுகிறார்களோ, எந்த 'விஷமி' எத்தகைய கலகமூட்டி விடுவானோ, அதனால் எத்தகைய விபரீதம் விளைந்துவிடுமோ, என்ற அச்சத்துடன் சென்றேன்—சென்றேனா!—ஓட்டம் பெருநடையாகச் சென்றேன்.

ஊர்வலம், 'ஐலண்ட்' மைதானத்திலிருந்து கிளம்புவதற்குள், போலீஸ் தடியடியும் கண்ணீர் புகைக்குண்டுவீச்சும் நடைபெற்று, மக்கள் பலதிசையிலும் துரத்தப்பட்டு, ஒரே குழப்பமாகிவிட்டநிலை; ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காகக் கிளம்பிய நமது பொதுச் செயலாளரையும், துணைச் செயலாளரையும் வழியனுப்பிவிட்டு, கிடங்கில் இருந்தேன். ஒரு அரைமணி, முக்கால்மணி நேரத்துக்கெல்லாம் நமது நாவலர் சென்ற மோடார் திரும்பிவந்தது;—

ஒரே குழப்பமாகிவிட்டது. சுட்டுவிட்டார்கள்! மக்கள் ஆத்திரமடைந்துவிட்டார்கள், தலைவர், தாக்கப்பட்டார். மக்களைப் போலீஸ் கண்மண் தெரியாமல் தடியால் அடித்து விரட்டுகிறது. பெரிய அமளி!

என்று நண்பர் வந்து கூறினார்; என்ன செய்வேன். கிளம்பினேன், திடல் சென்றேன். மக்கள் கூட்டம். கண்களை மிரட்டும் அளவுக்கு! அவர்கள் மனநிலையோ என்னை மருட்டும் விதத்தில்! ஆனால், ம. பொ. சி. யும், பி. டி. ராஜனும், நாவலரும் பிறரும் அங்கு நிலைமையைச் சரிசெய்து கொண்டிருந்தனர், நானும் அவர்களுக்குத் துணையாக நின்றேன்.


போலீஸ் அதிகாரிகள், கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது என்ற காரணம் காட்டி ஊர்வலத்தைத் தடுத்துவிடலாம் என்று எண்ணியிருப்பர். தடியடி! தலைவர்கள் தாக்கப்பட்டனர். மக்கள் கொதிப்புற்ற நிலை. கண்ணீர்ப் புகைக்குண்டு கிளப்பிய, புகையும் நெடியும், தடியடியால் ஏற்பட்ட தழும்பும் குருதியும், இவை எல்லாவற்றையும்விட, நடுக்கும் குரலில், கண்ணீர் சிந்தியபடி நண்பர் நடராசன் நடைபெற்ற சம்பவத்தை என்னிடம் சொன்னதும், என்னை வெகுவாக உருக்கிவிட்டது.

பி. டி. ராஜன் என்னசொல்கிறார்? என்று கேட்டேன்.

ஊர்வலம்நடத்தியேதீரவேண்டும் என்று கூறுகிறார். போலீஸ் அதிகாரிகளிடமும் கூறிவிட்டார்—என்றார் நடராசன்.

தம்பி! பி. டி. ராஜன் இருக்கும் இடம் நோக்கி என் விழிகள் சென்றன, அந்தத் தமிழ்த் தலைவர், மக்களை அமைதிபடுத்திக்கொண்டும், ஒழுங்கு படுத்திக்கொண்டும் இருந்தகாட்சி என் உள்ளத்தைத் தொட்டது.

ஊர்வலம் கிளம்பிற்று; ம. பொ. சி. உடனிருந்தார்; நான் ஒழுங்கு! அமைதி! ஒழுங்கு! அமைதி! என்று கூவினேன்—'வாழ்த்தொலி' என்னைக் களிப்பிலாழ்த்திற்று— கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது ஊர்வலம்.



தம்பி, எழுச்சியுற்ற தமிழகத்தைக் கண்டேன், எந்தையர் நாடு இனி எத்தரின் பிடியிலிருந்து விடுபடும் என்ற உறுதிகொண்டேன்- அதோ தமிழர், வரிசை வரிசையாக வருகிறார்கள் — வாழ்த்தொலியுடன் — அடிபட்டார்கள் தடியால்- போலீஸ் துரத்திற்று கண்ணீர்ப்புகைகுண்டு வீசப்பட்டது—, கலங்கினரோ தோழர்கள்? கடமையை மறந்தனரோ? இல்லை, தம்பி, இல்லை! பெருங்கூட்டம் ஆத்திரமடைந்து, கட்டுக்காவலை மீறிக் கையில் கிடைத்ததைக் கொண்டு எதிர்த்தோரைத் தாக்கி இடர்விளைவித்து நாசம் நர்த்தனமாடச் செய்வதற்கான, எரிச்சல் என்னென்ன உண்டாக்க முடியுமோ அவ்வளவையும், மக்கள் போக்கறியாப் போலீஸ் செய்துவிட்டது.

அமைதியை நிலைநாட்டச்சென்ற ஜீவாவைத் தாக்கிக் கீழே சாய்ப்பதைக் கண்ட பிறகும், மக்கள் எங்ஙனம் கட்டுக்கு அடங்கி நிற்க முடியும். எந்த வினாடியிலும், எரிமலை நெருப்பைக் கக்கும், என்ற நிலை—குமுறலை, பயமூட்டுவதாக இருந்தது. எனினும் எடுத்த காரியத்தைப் பழுதின்றி முடித்தாக வேண்டுமே என்ற பொறுப்புணர்ச்சியும், ஆத்திரத்துக்கு இடமளித்தால் அதுவரை பெற்ற மகத்தான வெற்றிக்குக் களங்கம் ஏற்பட்டுவிடும், தமிழரின் பண்பாடு கெட்டுவிடும், இழிவும் பழியும் வந்து தாக்கும் என்பதை அறிந்ததால் ஏற்பட்ட பொறுமையும் மக்களை ஒரு கட்டுக்குள், ஒப்பற்ற ஒழுங்குக்குள் கொண்டுவந்து நிறுத்திவைத்தது. ஆகஸ்ட்டுக் கலகம் அறிந்த மக்கள்—பம்பாய் சம்பவம் பற்றிய பத்திரிகைச் சேதிகளைப் படித்த மக்கள், அன்று மட்டும், தமது கோபத்துக்கு இடமளித்திருந்திருப்பாரானால், தம்பி! வெண்ணிற மணல் செந்நிறமாகி இருக்கும், நாம் அனைவரும் வெட்கித் தலைகுனிந்தோ, அல்லது வெட்டுண்ட கரம், கால் கண்டு துக்கித்துக் கொண்டோ இருந்திருப்போம். மயில் தானே ஆடவேண்டும்! வான்கோழியுமா? காங்கிரஸ் பெருந் தலைவர்கள் மட்டுந்தானே, அர்த்தால் நடத்த முடியும்—இதுகளெல்லாமா, என்று கேட்டு, இன்னேரம், தண்டோரா சர்க்கார் நம்மை இடித்துரைத்திருக்கும்— இழித்துரைத்திருக்கும்; நாமும் பதிலளிக்க முடியாமல் திண்டாடித் தேம்பிக்கிடந்திருப்போம். ஆனால் தீயில் தள்ளப்பட்டதுபோன்ற நிலை எனினும் தமிழர், தமது பண்பினை இழந்தாரில்லை! வீரம் கொழுந்துவிட்டெரிந்தது, ஆனால் வெறி தலைகாட்டவில்லை, ஆர்வம் ஆற்று வெள்ளம்போல் எழும்பிற்று, எனினும் கரை உடைபடவில்லை, குறிக்கோளை மறவாத பொறுப்புடன் நடந்துகொண்டனர்.

தம்பி! ‘உறுதிமொழி’ எடுத்துக் கொள்ளும்படி, கூட்டணித் தலைவர் கேட்டுக் கொண்டபோது, அவர் நிகழ்த்திய உரை, என்னென்பேன், நெஞ்சம் கரைந்தது, கண்களில் நீர் நிரம்பிற்று எங்கிருந்து கிடைத்தது அவருக்கு அந்த உருக்கம், எவரிடம் கற்றார் அந்தக்கனிவு, மக்கட் கூட்டத்துடன் அடிக்கடி தொடர்பு கொள்ளாதவர் என்ற பழிச்சொல்லுக்கு ஆளான ஓர்கட்சியின் தலைவர், அன்று மக்களைத் தன் வயப்படுத்திய திறமையை இதுநாள் வரையில் எங்கே ‘ஒளிய’ வைத்திருந்தார்—என்று—நான் எண்ணி எண்ணி வியந்தேன்.

‘திருஷ்டிபரிகாரம்’ போல, சிறு குழப்பம் நடைபெற்றது —அது கண்டு நான்வருந்துகிறேன்—அதுவும் இல்லாதிருந்திருக்குமானால், நாம் இன்று பெற்றுள்ள வெற்றி, மாசு மருவற்றதாகும் என்று கூறினார் கூட்டணித் தலைவர். கண்ணியத்தை அணியாகக் கொண்ட ஒரு தலைவரால் மட்டுமே, அதுபோல் கூறியிருக்க முடியும்.

பொதுவாகவே தம்பி! மக்கள், பெருந் திரளாக, வெள்ளம் போல் கூடியிருக்கும் நேரத்தில், அவர்களிடம் ஆத்திரத்தை மூட்டிவிடுவதும், அவர்களைப் பலாத்காரத்தில் ஈடுபடச்செய்வதும், எளிதான காரியமாகும், அது மட்டுமல்ல, இரண்டாந்தர மூன்றாந்தரத் தலைவர்கள், அதே மன அரிப்புடன் இருப்பர்; இச்சமயம் தவறினால் மறு சமயம் வாய்ப்பதரிது என்ற போக்கிலே,

இழுத்துப்போட்டு
உதையுங்கள!
இடியுங்கள்!
உடையுங்கள்!
கொளுத்துங்கள்!

அஞ்சாதீர்கள், தாக்குங்கள்!
போலீஸ் சுண்டைக்காய்போல!
குண்டுகள், உமது கரங்களுக்கு விளையாட்டுச் செண்டுகள்!

என்றெல்லாம் ‘தூண்டிவிட்டு’ கலகம் மூட்டிவிடுவதற்குத்தான் துடியாய்த் துடிப்பர்.

தமிழ்த் தலைவர்கள் அங்ஙனமா நடந்துகொள்வர்!

அன்று, பி. டி. ராஜன் கொண்டிருந்த கவலையெல்லாம், மக்களைச் சமாதானப்படுத்தி, மனக் கொதிப்பை மாற்றி, அவர்களை அமைதியான முறையில், தத்தமது இல்லம் சென்று, அன்று நடத்திய அர்த்தாலின் வெற்றியை நேர்த்தியானதாக்கிக் கொள்ளச் செய்யவேண்டுமே என்பதுதான்.

அவரே, பிறகு கூறியபடி, அப்படிப்பட்ட மக்கட் கூட்டத்தை அவர் அதற்குமுன்பு கண்டதில்லை.

மக்களோ, தடியடி கண்டு கொதிப்படைந்த நிலையில் உள்ளனர்.

ஒரு இலட்சத்திற்குக்குறையாது என்று, மாற்றார்கள் ஒப்புக்கொள்வர்.

அவர்கள் ஆலைகளிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் அலுவலகங்களிலிருந்தும் குடில்களிலிருந்தும் வந்துள்ளனர்.



கூட்டணித் தலைவர், குணக்குன்று. பி. டி. ராஜன்.

எளிதாக, அவர்களைத் துப்பாக்கி மிரட்டிவிடாது!

கண் எதிரே, தமது தோழன் சுடப்பட்டுச் சுருண்டுகீழே வீழ்ந்தாலும், அவன் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, மாற்றானை நோக்கிப் பாய்ந்து தாக்கிடும் வல்லமை பெற்றோர்.

மார்பில் பாய்ந்த வேலினை இழுத்தெடுத்து, எதிரேவரும் வேழத்தின் மீதுவீசிய வீரர்வழிவந்தவரல்லவா! வீரத்திற்கும் நெஞ்சு உரத்துக்கும் பஞ்சமா? அவர்கள் ஈடுபட்டிருக்கும் காரியமோ, தாயகத்துக்கு வந்துற்ற கேட்டினை ஓட்டிடும் விடுதலைக் கிளர்ச்சி! இங்கிலையில் அவர் அச்சம் கொள்வரோ? அப்படிப்பட்ட மக்களைத் தூண்டிவிட்டு அமளியை மூட்டிவிடுவதுதானே எளிதான காரியம். ஆனால், பி. டி. ராஜன், இதயத்திலிருந்து கிளம்பி, கேட்போர் இதயத்தில்சென்று தங்கும் திறன் படைத்த பேருரையால், அவ்வளவு மக்களையும் அமைதியுறச்செய்தார்! அன்று, ஒருதுளி கலகமும், சிறு அடிதடியும், எத்தகைய கூச்சலும் குழப்பமுமின்றி, அவ்வளவு மக்களும் கலைந்து சென்றனர். எத்தனை சம்பவங்களை இதற்கு ஈடாகக் காட்டமுடியும், எங்கள் கட்சிபெரிய கட்சிஎன்று 'விருது'பேசுவோரால்!

தம்பி! கோவாவில் நடைபெற்ற கொடுமையைக் கண்டிக்க சென்னையில் அர்த்தால் நடத்தினர். சர்க்கார் துணைநின்றனர். சகல கட்சிகளும் கலந்துகொண்டன. எதிர்ப்பாளர், ஏனம் பேசுவோர், எவரும் கிடையாது, தண்டோரா இல்லை. அர்த்தால் வேண்டாமென்று தலையங்கம் தீட்டவில்லை. பெரியார் கூட, அதனைப் பலாத்காரம் என்று, பேசினாரில்லை. திராவிடர் கழகமும், திருநாளில் கலந்துகொள்வதுபோல, அதிலே கலந்து கொண்டது கண்ணீர்த் துளிகள் கலந்துகொள்ளும் காரியத்தில் நாங்கள் கலந்துகொள்வதா, என்ன ஆவது எமது கண்ணியம் என்று வாதாடவில்லை. அதே கடற்கரையில், கூட்டம் நடைபெற்றது.

எதிர்ப்பே இல்லாத அந்த அர்த்தாலில்கூட, அமளி மூண்டது; குழப்பம் ஏற்பட்டது.


பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தாலை நடத்தியவர்களை, கக்கன் அரசியலில் தோற்றோடிப் போனவர்கள் என்று கேலிபேசினாரல்லவா, அவர், வாய் பொத்திக் கொண்டுதான் கிடந்தார்,

நமது நடராசன்
ம. பொ. சி.
சுயம்பிரகாசம்
விநாயகம்
இரத்தினம்
ஜீவானந்தம்

ஆகியோரெல்லாம் இருந்துதான் அர்த்தால் கூட்டம் நடத்தினர்.

டாக்டர் வரதராஜுலுவும் ராஜாராம் நாயுடுவும், அண்ணாமலைப் பிள்ளையும், இவர்களுடன் தோளோடு தோள் சேர நின்றனர். தேசீயம் தீட்டுப்பட்டுவிடவில்லை! நாடு நாசமாகிவிடவில்லை! காமராஜர் சர்க்கார், 'தண்டோரா' போட்டு கடைகளைத் திறவுங்கள், போலீஸ் பாதுகாப்புத் தருகிறோம் என்று கனிவு காட்டவில்லை; ஜனநாயக முறைகள் இருக்கும்போது, ஏன் அர்த்தால் நடத்துகிறீர்கள் என்று தினமணி கேட்கவில்லை, மெயில் தன் 'மேதாவிலாசத்தை'க் காட்டவில்லை.

முதன் மந்திரி காமராஜர் காலையும் மாலையும் நகரைச் சுற்றிப் பார்த்தார் — எல்லாம் அமைதியாகவே இருக்கிறது என்றார்.



அமைப்புச் செயலாளர், ம. பொ. சி.

அமைதியின் இலட்சணம் எப்படி இருந்தது தெரியுமா, தம்பி!

**"பஸ்கள் ஓடின ஊர்வலம் நடத்தியோரும் தொழிலாளர்களும் குறுக்கிட்டதால் நின்றன! மீண்டும் ஓடத் தொடங்கின! மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்தினர் பஸ்கள் நின்றுவிட்டன."**

இது, கோவாவுக்கான அர்த்தாலின் போது! தினமணியே எழுதியது.

கூட்டணியோ, பஸ்களைத் தடுத்து நிறுத்தக்கூடாது — மக்களை மறிக்கவும் கூடாது — ஒருவரையும் வற்புறுத்தக் கூடாது— என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டது.

இந்த அர்த்தால் கண்டிக்கப்பட்டது. கோவாவுக்கான அர்த்தால் பற்றியோ, கொஞ்சு மொழி பேசினர், வேளைக்கேற்ற கொள்கை பேசும் போக்கினர்.

கல்லெறி சரமாரியாக நடைபெற்றிருக்கிறது, கோவா அர்த்தாலின் போது.

காலிகள் கல்வீச்சு — என்று கூறவில்லை. தினமணி கனிவுடன் பேசுகிறது! பஜாரியை மனைவியாகக்கொண்ட பயந்தாங்கொள்ளிக் கணவன், அவளிடம் 'பாத பூஜை' பெற்றாலும், கோபம் காட்டாமல், உதைக்காதே பெண்ணே! உன் கால் வலிக்குமடி கண்ணே! என்று பேசுவானுமே, அதுபோல, கல்லடி கண்டும், கனிவு ஒழுக ஒழுக எழுதுகிறது.

**"சந்நடி சாக்கில் சில பொடியன்கள் ஸ்மால்காஸ் கோர்ட் பகுதியில் கற்களை வீசினர்."**

பொடியன்கள் — காலிகள் அல்ல! தெரிகிறதா தம்பி, தேசியம்!!

நடைபெற்றது என்ன தெரியுமோ? எல்லாக் கதவுகளையும் மூடிக்கொண்டு, ஹைகோர்ட் வேலையைக் கவனிக்கலாயிற்று, கோவா அர்த்தால் கூட்டத்தினர். விடவில்லை, கோஷமிட்டுக்கொண்டு சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விசாரணை நடந்துகொண்டிருக்கும் கோர்ட்டுகளுக்குள் புகுந்தனர்.

உடனே, துப்பாக்கி முழங்கிற்றா? இல்லை! உடனே ரிஜிஸ்டிரார், பிரதம நீதிபதி

யைக் கலந்துகொண்டு, கோர்ட்டு கள் மூடப்படும் என்று அறிவித் தார்!

இரண்டுகவுண்டர்களையும், மேஜை நாற்காலிகளையும், ஜெனரல் போஸ் டாபீசில், ஒரு கூட்டம் நுழைந்து உடைத்தது.

அரை குறையாகத் திறந்து வைத்திருப்பவைபோலத் தோன் றிய கடைகள், ஸ்தாபனங்கள் முன்னிலையில், ஆர்ப்பாட்டக் காரர்கள், கோஷமிட்டனர்; மூடச் செய்தனர்.

தம்பி! தினமணியிலிருந்து திரட் டித்தந்திருக்கிறேன், சேதிகளை. தொழிலாளர்களுக்கும், தேவிகுளம் கிளர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்? தொழிலாளர்களே! அரசியல் கட்சிகளின் வலையில் விழாதீர்!— என்று மாய்மாலம் பேசினார்களல் லவா, தம்பி! கோவா அர்த்தா லுக்கு, தினமணி, திருப்தியுடன் எழுதுகிறது,

"ராஜ்ய சர்க்காரின் தொழிற்சாலைகள்
கார்ப்பரேஷன் ஒர்க்ஷாப்
பெரம்பூர் ரயில்வே ஒர்க்ஷாப்
பி. சி. மில்,
சால்ட்—கோட்டார்ஸ் கூட்ஸ்ஷெட்

இவை யாவும் மூடிக்கிடந்தன என்று.

இவைமட்டுமா. கப்பல்களில் சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி இல்லை—ஏனென்றால் அந்தத் தொழிலாளர்களும் அர்த்தாலில் சேர்ந்துகொண்டனர், என்று செப்புகிறது, தினமணி.

மாணவர்களே, விட்டு விடுங்களய்யா! அவர் களை; இத்தகைய அர்த் தால் கிளர்ச்சிகளிலே ஈடுபடச் செய்யாதீர்கள் என்றுமகானுபாவர்கள் கூறினர் — கல்வித் துறைத் தலைவராகி, தமிழரின் கலி தீர்த்தவர் இருக்கிறாரே, சுந்தரவடி வேலர், (குத்தூசியாரின் சகலை) அவர் பலமான தாக்கீது பிறப்பித்தார் —பள்ளிகள் அடைபட்டு கிடக்கக்கூடாது என்று. ஆனால் கோவாவின் போது,

பச்சையப்பன்
லயோலா
சட்டக்கல்லூரி
வைத்தியக்கல்லூரி
கிண்டிகல்லூரி
தாம்பரம் கல்லூரி

எல்லாம் மூடிக்கிடந்தன. மாணவர் கள், அர்த்தால் ஊர்வலம் நடத் தினர், என்று தேசியம் பேசுகிறது, தினமணி!

அர்த்தாலால் கஷ்டம் ஏற்பட வில்லையா என்றால், நிரம்ப என் பதும், தினமணி மூலமே தெரி கிறது. ஆனால் அதனை அந்த ஏடு கூறும் 'தினுசு' இருக்கிறதே, வேடிக்கை அதுதான்.

திடீல்னு தொடவே, நான் தடால்னு கீழே விழுந்துவிட்டே னுங்க. ஜாடை மாடையா, முன் கூட்டியே சொல்லியிருந்தா, நான் கொஞ்சம் சிங்காரிச்சுக்கிட்டு வந் திருக்கமாட்டேனா — என்று கேட் கும் 'இரவு ராணிகள்' பற்றிக் கதை கதையாகப் படிக்கிறோம் அல்லவா! அதெல்லாம் எந்த மூலைக்கு! இதோ பார், தம்பி தினமணியின் எழுத்தை.

"ஒரு நாள் இடைவெளி கொடுத்து' முன்னறிவிப்புடன் திட்டமிட்டு நடத்தி யிருந்தால் யாரும் கஷ்டப்படாமல் அர்த்தால் நடந்திருக்கும் என்பது பொதுஜன அபிப்பிராயம்"

நாம் நடத்திய அர்த்தாலோ, பல நாள் திட்டமிட்டு, பலாத்காரம் எங் கெங்குச் சந்துகளின் வழியாக வந்துவிடக்கூடுமோ, அவைகளை எல்லாம் அடைத்துவிட்டு, பொது மக்களுக்குக் கூடுமானவரையில் சங்கடம் ஏற்படாதிருப்பதற்காகப் பல 'விதிவிலக்குகள்' அளித்து, காரியம் பெரிதே தவிர வீராப்பு பெரிதல்ல என்ற நோக்கத்துடன் நடத்தப்பட்டது.

தேவிகுளம் பீர்மேடு பிரச் சினையை, தமிழர்—மலையாளி மாச் சரியமாக்க நாம் விடவில்லை! நாம், பாராட்டிப் புகழவேண்டிய வகை யில் மக்கள் நடந்துகொண்டனர்.

இத்தனைக்கும், மலையாளிகளைத் துரத்துங்கள்! மலையாளிகள் ஆதிக் கம் ஒழிக! மலையாளிகளின் ஆதிக் கம் தெரியவேண்டுமானால், ஆபீசு களைப்பார், ஓட்டல்களைப்பார், ரயில் வண்டிகளைப்பார்!—என்றெல்லாம், 'விடுதலை' மும்முரமாக முரசறைந்து வந்தது. அர்த்தாலைக் காரணமாக் கிக்கொண்டு, யாராவது இரண் டொரு எரிச்சல் பேர்வழிகள் இந் தச் செயலில் ஈடுபட்டுவிடுவார் களோ என்று நான் அஞ்சிய துண்டு!

தமிழ்நாடு முழுவதும் வெற்றி யுடன் நடைபெற்ற இந்த அர்த்தா லில், ஒரு இடத்திலாவது தமிழர் —மலையாளி மோதுதல் ஏற்பட வில்லை என்பது, கூட்டணி பொறுப்புள்ள கண்ணியவான்கள் கொண்டது என்பதற்கு மறுக் கொணாச் சான்றாகும்.

மிகப்பெரும்பாலோர், பிரச்சினை யின் முக்கியத்துவத்தை உணர்ந் தும் கூட்டணியின் முயற்சியில் காணக்கிடக்கும் தூய்மையை அறிந் தும், கூட்டணியில் இடம் பெற்ற வர்களிடம் நம்பிக்கை வைத்தும் இந்த 'அர்த்தாலை' தங் கள் காரியமாகக் கொண் டனர். அதனாலேயே, இவ்வளவு எளியவர் களால், இத்துணை சிறப் பான வெற்றிபெற முடிந் தது.

போகட்டும், வெற்றி கரமாக அர்த்தால் நடை பெற்றதா பிறகாவது, போக்கை மாற்றிக் கொண்டனரா, என்றால், இல்லை, தம்பி. அந்த அளவுக்குக் கூடக் கண் ணியம் அரும்பிடக் காணோம்; மாறாக, அறிக் கையும், தலையங்கமும், முழக்கமும் முணுமுணுப் பும் மீண்டும், கையாண்டி செய்யும் போக்கிலேயே உள்ளன.



கூட்டணிச் செயலாளராகப் பணியாற்றிய நமது, நடராசன்.

"என்னமகா அர்த்தால்! மோட்டாரெல்லாம் ஓடிற்று — ரயிலெல்லாம் ஓடிற்று — ஆபீசெல்லாம் வேலை செய்த்து" என்று ஏளனம் செய்தனர்.

இவர்கள் ஏதோ திங்களுக்கொருதரம், அர்த்தால் திட்டம் வைத்துக்கொண்டிருப்பது போலவும், அப்போதெல்லாம், காக்கை குருவியிலிருந்து கனவேக ஆகாய விமானம் வரையில் வானத்தில் பறந்திடாது, நத்தை நண்டிலிருந்து மோட்டார் ரயில்வரையில் நகராது, நடவாது, சத்திரம் சாவடியிலிருந்து சர்க்கார் பணிமனைவரையில் திறவாது அலுவலாற்றாது மூடிக்கிடப்பது போலவும், நம்மால் இந்த அளவுக்கு வெற்றி காண முடியாததால், நாம் வெட்கித் தலை குனிய வேண்டும் போலவும், பேசுகின்றனர்.

நாம் நடத்திக்காட்டிப் பெற்றதை விட மகத்தான வெற்றியைப் பெறக் கூடியவர்கள், முன்வருவார்களானால், நாம் குறுக்கே நிற்கப் போவதுமில்லை, குறை கூறித் திரியப்போவதுமில்லை, அனுமதி அளித்தால் அவர்தம் கொடி ஏந்திகளாகக் கூடப் பணியாற்றுகிறோம்! ஆனால், சற்றே அவர்கள் தங்கள் குறிப்பேட்டினைக் காட்டச்சொல்லு தம்பி!

அர்த்தாலை வெற்றிகரமாக, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடத்திக்காட்டவேண்டுமானால், நம்மைக் குறைகூறுவோரில் பலர் முன்வரக் கூடுமே தவிர, சர்க்காரின் தண்டோராவும் சந்தர்ப்பவாதிகளின் எதிர்ப்பும், முதலாளிக்குக் கையாட்களாக உள்ள தொழிலாளர் !தலைவர்களின் தெகிடுதத்தமும், மூக்கு வரை நம்மீது கோபம் கொண்டோரின் குத்தலும் ஏற்பட்டும், சமாளித்து நாம் பிப் 20-ல் வெற்றி கண்டதுபோல, நடத்திக்காட்டச் சொல்லு பார்ப்போம்!

நேராப் பார்க்கிறு. ஜோரா இல்லே! என்னைப்போல மாறு கண்ணு உண்டாடி, மங்கத்தாயி!—என்று கிராமத்திலே பாடுவார்கள், அதுபோல், இயலாதவர்கள், தமது இயலாமையை மறைத்துக் கொள்ள ஏதேதோ பேசுகிறார்கள். வேறென்ன!

'அர்த்தால் வெற்றியாம்! என்ன வெற்றி! கடைகளை மூடிவிட்டார்கள்! ஆனால் ஏன் மூடினார்கள்? இவர்களுடைய வேண்டுகோள் கேட்டா? அதுதான் இல்லை! காலிகளுக்குப் பயந்து கடைகளை மூடினார்கள்!" என்று ஒத்த கருத்தினர் ஒரே குரலில் பேசுகின்றனர்! எவ்வளவு நேர்த்தியான வாதம்!

காலிகளுக்குப் பயந்து கடை மூடினார்களாம்! ஏனய்யா பிப் 20ல் மட்டும், காலிகளுக்குப் பயந்தனர்? 19, 21, ஏன் அந்தப் பயம் இல்லை? என்று கேட்டுப்பார், தம்பி; கொழுக்கட்டை இல்லாமலே, வாய் மூடிக்கிடக்கும்.

**காலிகளுக்குப் பயந்து கடை மூடினார்கள் என்ற வாதம், ஏதோ நமக்கு இழிவளிப்பது என்று எண்ணிக்கொண்டு பேசுகிறார்களே தவிர, அலசிப் பார்த்தால் அது, ஆட்சியாளர்களுக்கே பெருத்த அவமானம் அளிப்பதாகும் என்பதை அறியலாம்.**

காமராஜர் ஆட்சி எப்படி இருக்கிறது?

காலிகள் நிறைய இருக்கிறார்கள்—கடைக்காரர்கள் எல்லோரும் கண்டு அஞ்சத்தக்க அளவுக்கு இருக்கிறார்கள்!

இவ்வளவு பலம் பொருந்திய நிலையில் காலிகள் இருப்பானேன்? கையாலாகவில்லை, அவர்களை அடக்க, ஒடுக்க, ஒழித்துக்கட்ட!

ஒரு ஆட்சியின் திறமைக்கு இதுவா நற்சான்று?

காலா காலத்தில், தக்க முறையில் அடக்கினால், காலிகள், ஏன் ஆட்சியாளர் குறிப்பிடத்தக்க அளவிலும், கடைக்காரர் அஞ்சத்தக்க தொகையிலும் இருக்கப் போகிறார்கள்? ஏன், காலிகள் அடக்கப்படவில்லை? முயற்சிக்கவில்லையா? முடியவில்லையா? இரண்டில் எதுவாக இருப்பினும் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளவர்களன்றோ!

காலிகளுக்கு அஞ்சாதீர்! கலவரத்துக்குப் பயப்படவேண்டாம்! போலீஸ் பாதுகாப்பு தருகிறோம்! என்று 'தண்டோரா' போட்டீரே, அப்படியிருந்தும், கடைக்காரர்களுக்கு அச்சம் இருப்பானேன்? கவசத்தொப்பியைக் காட்டினீர்கள், விரைந்து செல்லும் சைகிள் போலீசை அனுப்பினீர்கள், கடுகிச் செல்லும் போலீஸ் வான்களை முடுக்கினீர்கள், தடியும் துப்பாக்கியும் ஏந்தினர், சந்து பொந்துகளிலும் நின்றனர், நெடுஞ்சாலைகளில் சென்றனர். எல்லாம் காட்டினீர்களே, ஏன் கடைக்காரர்களுக்குத் தைரியம் பிறக்கவில்லை!

உங்களிடம் நம்பிக்கை இல்லை! அப்படித்தானா ஐயா, ஆட்சியாளர்களே! உங்களால் காலிகளை அடக்க முடியாது, கலவரத்தைச் சமாளிக்க முடியாது, உங்கள் போலீஸ் பாதுகாப்புப் பயனில்லை—என்று கடைக்காரர்கள் எண்ணுகிறார்கள். ஏனய்யா, மணிமகுடதாரி என்று விடுதலையிடம் பட்டப்பெயர் பெற்றுள்ளவரை முதல்வராகக் கொண்டுள்ள ஆட்சியாளர்களே! அப்படித்தானா? உங்களிடம் நம்பிக்கை இல்லையா, கடைக்காரர்களுக்கு?

காலிகளை அடக்கக் கூடத் திறனற்றவர்கள் என்று கடைக்காரர் உங்களைப்பற்றித் தீர்ப்பளித்துவிட்டார்கள் என்றல்லவா ஏற்படுகிறது உங்கள் வாதத்தை அலசினால், வெட்கமில்லையா உங்களுக்கு? காலிகளைக்கூட அடக்கமுடி



'எங்கள் கட்சி கூட்டணி'யில் என்று கூறுகிறார் மற்றோர் செயலாளர், சுப்ரமணியம்,

யாது உங்களுக்கு ஏனய்யா, ஆட்சியும் அந்தஸ்தும்?

போலீஸ் இருக்கிறது தொகை தொகையாக! காலிகளைக் கண்டு, கடைக்காரர் அஞ்சினாராம்! சொத்தையானது மட்டுமல்ல, தமக்குத்தாமே இழிவு தேடிக் கொள்ளும் வாதமல்லவா இது. சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ணிக்கொண்டு, இப்படியா சத்தற்ற பேச்சுப் பேசுவது!

இங்கே உள்ளவர்கள் இந்த வாதத்தைக்கேட்டு என்னஎண்ணுவார்கள் என்பது கூடக் கிடக்கட்டும், வெளிநாட்டில் உள்ள ஆட்சியாளர்கள், இந்த விசித்திர வாதத்தைக் காண நேரிட்டால், என்னென்ன பேசுவர், எண்ணும்போதே வெட்கம் வேலாகிக் குத்துமே!

சென்னையில் காமராஜர் என்றோர் 'கனவான்' முதல் மந்திரியாகக் கொலுவீற்றிருக்கிறாராம். மகா சாமர்த்தியசாலியாம்! எதிர்ப்பே எழாமல் தடுத்துக் கொள்வதில் சூரராம்! எவரையும் கண்டு அஞ்சாது போரிடும் பெரியாரையே சொக்க வைத்து விட்டவராம்! அப்படிப்பட்டவர் ஆட்சியிலே, காலிகள் ஏராளமாகி விட்டனராம், கடைக்காரர்கள் அஞ்சினராம், பயம் வேண்டாம், போலீஸ் பாதுகாப்பு இருக்கிறது என்று காமராஜர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாராம்! கடைக்காரர்களுக்கு நம்பிக்கையோ, தைரியமோ வரவேயில்லையாம். அதனால் தான், அர்த்தாலின்போது கடை அடைத்துவிட்டனராம் — என்று பேசிடும்போது, காங்கிரஸ் நண்பர்களே! கைகொட்டி மட்டுமா, அவர்கள் சிரிப்பார்கள். செச்சே! எனக்கே எண்ணும்போது வெட்கமும் வேதனையுமாக இருக்கிறது!!

கடைஅடைத்ததற்குக்காரணம், இவர்களை மதித்து அல்ல, இவர்கள் எடுத்துக் காட்டிய பிரச்சினையை மதித்துக் கடை மூடினர், என்று வாதாடினால், அதிலே தரக்குறைவோ, ரசக்குறைவோ ஏற்படாது. நாங்கள் 'சின்ன மனிதர்கள்' என்று எள்ளி நகையாடித் திருப்தி கொள்ளலாம்—கவலையில்லை. பிரச்சினையின் கண்ணியம் கடைக்காரர் மனதைக் கவர்ந்தது என்று சொல்லலாமே.

எங்களையும், நாங்கள் எடுத்துக் காட்டிய பிரச்சினையையும் சின்ன தாக்கிக் காட்ட வேண்டும் என்ற சிறுமதியால், எப்படிப் பேசினால் எப்படி எப்படிப் பொருள் கொள்வர் என்பது பற்றியும் எண்ணாமல், சொத்தை வாதத்தில் இறங்கி, காலிகளுக்கல்லவா, போலீசைவிட, அதை ஆளும் ஆட்சியாளர்களை விட மேலான இடம் கொடுத்து விட்டீர்கள்! சரியா? ஆட்சியாளர்களுக்கே அல்லவா இது அவமானம்.

கடைகளை மூடியதற்குக் காரணம், காலிகள் பற்றிய பயம், என்று வாதாடிவிட்டு, அடுத்த விநாடியே, கலவரம் அன்று ஏற்படாததற்குக் காரணம், கூட்டணித் தலைவர்களின் கட்டுப்பாடு முறை அல்ல, எமது போலீசின் திறமைதான் அதற்குக் காரணம் என்று பேசுகிறார்கள். பொருந்துகிறதா, பொருளிருக்கிறதா!

அர்த்தாலன்று கலகம் எழாத படி பாதுகாப்பளித்திடும் திறமை படைத்தது உமது போலீஸ், என்றால், காலிகளையும் அடக்கி, கடைக்காரரின் அச்சத்தையும் துடைத்து கடைகளைத் திறக்கச் செய்து அர்த்தாலை முறியடித்திருக்கலாமே. ஏன் செய்யவில்லை? ஏன்? ஏன்?

தண்டோரா போட்டும், 'கபர்தார்' கொடுத்தும், கவசம் மாட்டியும், கைத்துப்பாக்கி கொடுத்தும், கடைக்காரர்களின் அச்சத்தைப் போக்க முடியாத ஒரு சர்க்கார் இருக்கிறது, அதனை, அதுவே கூறிக்கொள்ளவும் செய்கிறது.


இது சிறப்புக்குச் சான்று என்று ஆட்சியாளர்களும் அவர் தம் ஆதரவாளரும் எண்ணிக் கொண்டால், நமக்கென்ன நட்டம்! போகட்டும்.

அர்த்தாலால் கண்டது என்ன? என்று, கை நிறையத் தண்ணீரை வாரி இறைத்தானதும் காயும் கனியும் பறித்தெடுத்திடக் கூடை தேடிடும் குணாளர்கள் குத்தல் பேச்சுப் பேசுகிறார்கள்.

கோவா அர்த்தால் நடந்த மறுநாள் போர்ச்சுகீசியன் போய்விட்டானா என்று நாம் கேட்டோமில்லை, ஏனெனில் அற்பத்தனமும் அரசியலும் ஒன்று கலந்தால், அசிங்கமும் அயோக்யத்தனமும்தான் நாட்டில் தலைவிரித்தாடும்.

அர்த்தாலில் ஈடுபட்ட எவரும், அர்த்தால் வெற்றிபெற்றான உடனே, தேவிகுளம் கிடைத்துவிடும் என்று எண்ணிடும் ஏமாளிகளல்ல; அவ்விதம் எண்ணிட இது ஏமாளிகள் நாடல்ல; அறிவு செறிந்த நாடு.

அர்த்தால் மூலம், தமிழரின் விழிப்புணர்ச்சி, எழுச்சித்திறன் நெருக்கடியான நேரத்தில் ஒன்றுபடும் உளப்பண்பு, கட்டுப்பாட்டுணர்ச்சி, பொறுப்புணர்ச்சி இவை, விளக்கமாகிவிட்டன. மதிப்பான பலன்கள்; மாண்புள்ள விளைவுகள்.



கணக்கெழுதுகிறார் பொருளாளர், உமாபதி.

இதுவரை எவருமே சொல்லாதது, யாரையும் திடுக்கிட வைப்பது, பெரியார் துவக்கும் கொடி எரிப்புப் போர்—என்றனர்.

நாடு, அலறித் துடித்தது. நண்பர்கள் நல்லுரை கூறித் தோற்றனர் — திராவிடர் கழகத்தின் கடமை உணர்ச்சியினர், கொடி தயாரித்தனர், விடுதலை 'பட்டியல்' வெளியிட்டது. பெரியார் சுழல் வேகச் சுற்றுப் பயணம் செய்தார்— நாளை என்ன நேரிடுமோ — என்று மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு நின்ற நிலை அனைவருக்கும் — ஆயிமென்ன, ராஜதந்திர

நிபுணர் ரணகளச் சூரர் காமராஜர் ஒரு சிறு அறிக்கை வெளியிட்டார் —பெரியார் தணிந்தார், துணிந்தோர் பணிந்தனர், கொடி எப்போதும்போலப் பறந்தது, கோட்டை மாளிகையிலே, குறுநகையுடன் கொலுவீற்றிருந்தார் காமராஜர்.

"என்ன ஆயிற்று கொடி எரிப்பு?"

"நின்றுவிட்டது!"

"அப்படியா? எப்படி?"

"நான் அறிக்கை வெளியிட்டேன்...பெரியார் கொடி எரிப்பை நிறுத்திவிட்டார்......"

"அச்சா! பஹுத் அச்சா!"

நேரு பெருமகனுருக்கும் காமராஜருக்கும் இதுபோல் உரையாடல்!

அதே முறையில், கூட்டணி திடுக்கிடத்தக்க திட்டமல்ல, சாத்தியமான ஒரு திட்டம் தீட்டிற்று. நாட்கள் பல சென்றன; நாடு ஆதரிக்கத் தொடங்கிற்று; காமராஜர் கடைசி நாளன்று, ஒரு அறிக்கை விட்டார்; திட்டம் கைவிடப்பட்டது—

இப்படி ஒரு 'சரித்திரம்' தேடினர்காமராஜர்.

கிடைக்கவில்லை, தம்பி, கிடைக்கவில்லை. ஒன்றுக்கு இரண்டாக அறிக்கைவெளியிட்டார்! ஓடோடி வேலை செய்தனர், திட்டத்தை நிறுத்த, கூட்டணியை உடைக்க, ஓட்டை ஒடிசலை உண்டாக்க; முடியவில்லை.

காமராஜரின் ராஜ தந்திரம், எல்லோரையும் பலிபீடத்துக்கு அழைத்துச் செல்லாது என்பது விளக்கமாகிவிட்டது. மகத்தான வெற்றி என்பேன் இதனை; ஏனெனில், காரணம் எதுவாக வேனும் இருக்கட்டும், அரசியலில், சபலத்துக்கு இடமளித்துவிட்டு, குறிக்கோள் நிறைவேற ஒரு தனிக் கட்சி வைத்துக் கொண்டிருப்பது, இயலாத காரியம், அரசியல் அறமுமாகாது.

காமராஜர்மீது பகை கக்கவே, இந்த முயற்சி என்று சிலர் காதல் பேசுகின்றனர்.

காதல், கடிமணமாக மாறுவதை நான் வரவேற்கிறேன். அதுவெறும் "கண்ணடி, கைப்பிடி, கடிதவீச்சு, அவசர அணைப்பு" என்ற முறையில் இருப்பதில், சுவை இருக்கலாம், பயன் இல்லை.


காமராஜர், தமிழரின் நலனைக் காப்பாற்றக் கூடியவர்; அவர் ஆட்சியில் ஏழை எளியவர் காப்பாற்றப்படுவர்; எவர் உரிமையும் பறிபோகாது; இனமும் தன்மானமும் தழைத்திடும்; என்பதிலே உள்ளம் நிறைந்த நம்பிக்கை ஏற்பட்டால், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, அவருடைய கரத்தையும் வலுவடையச் செய்யலாம், நம் கருத்தையும் புகுத்தி வெற்றி காணலாம் என்று கருதிக் கூடிக்கொள்பவர்களை நான் பின்பற்ற முடியாது என்றாலும், அவர்களின் நேர்மைக்கும் நெஞ்சு உரத்துக்கும் மரியாதைகாட்டத் தயங்கமாட்டேன்.

எனக்கென்று ஒரு கட்சியும் கொடியும் உண்டு, வேண்டும்.

அதற்கான கொள்கையும் திட்டமும் உண்டு, வேண்டும்.

காங்கிரஸ் கட்சி, இந்த என் கொள்கை, குறிக்கோள், திட்டம், கட்சி ஆகியவற்றுக்கு, விரோதி, துரோகி.

ஆகவே நான் காங்கிரஸ் கட்சியில் சேரப்போவதில்லை, முடியாது.



அகமும் முகமும் எழுச்சி மலர்ந்திடும் காட்சியில் ஜீவா.
கூட்டணிச் செயலாளரில் ஒருவர்.

ஆனாலும், நான் காமராஜரை ஆதரிப்பேன், அவர் முதல் மந்திரியாக இருக்கவேண்டும் என்று பாடுபடுவேன்; காங்கிரஸ் மெஜாரடியாக வந்தால்தான் அவர் முதல் மந்திரியாக முடியும், ஆகவே காங்கிரஸ்காரர் தேர்தலில் ஜெயிக்க முழு மூச்சாகப் பாடுபடுவேன், காங்கிரசை எதிர்த்து, அதன் மூலமாகக் காமராஜருக்குச் சங்கடம் விளைவிக்கத் துணிபவர்களைக் கண்டதுண்டமாக்குவேன், இதனாலே, நான் காங்கிரசில் சேர்ந்துவிட்டேன் என்று எண்ணாதீர்கள், எனக்கென்று ஒரு தனிக் கட்சி உண்டு, கொடி உண்டு, கொள்கை உண்டு, காங்கிரஸ் என் விரோதிதான் நாட்டுக்குத் துரோகிதான்!! — என்று வாதாடும்போதுதான், தம்பி! எனக்கு மயக்கம் வருகிறது.

இததனைக்கும் காமராஜரைப் பெரியார் படம்பிடித்துக்காட்டியிருப்பதைப் பார்க்கும்போது, காமராஜர் ஏதோ 'தூய்மையான ஒரு தேவன்' என்று எனக்குத் தோன்றவில்லை.

ஆச்சாரியாரையும் காமராஜரையும் ஒப்பிட்டு பெரியாரின் விடுதலையில் எழுதப்பட்டிருக்கிறது;

**"இருவரில் கழகத்தை ஒழிப்பதில், கழகக் கொள்கைகளை எதிர்ப்பதில், பார்ப்பனீயத்தை வளர்ப்பதில், வடநாட்டானுக்குக் கங்காணி வேலை செய்வதில், நேருவுக்கு வெண்சாமரம் வீசுவதில், ஒருவருக்கு ஒருவர் இளைத்தவரல்ல!!"**

தம்பி! படப்பிடிப்பு பார்த்தனையா! திராவிடர் கழகத் தோழர்களிடம் காட்டிவிடாதே, அவர்களின் கண்கள்கொப்பளிக்கும்.

**கழகத்தை ஒழிப்பவர்**

**கழகக் கொள்கைகளை எதிர்ப்பவர்**

**பார்ப்பனீயத்தைவளர்ப்பவர்**

**வடநாட்டானுக்குக் கங்காணி**

**நேருவுக்குவெண்சாமரம் வீசுபவர்!**

இது, காமராஜர், பெரியார் படப் பிடிப்பின்படி.

காமராஜர் எதிர்க்கப்பட்டால், என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியாது என்று பெரியார் கூறுவானேன்?

சுந்தரவடிவேலு
ராஜரத்தின முதலியார்
அப்பாத்துரைப்பிள்ளை

என்று ஏதோ ஒரு பட்டியலைக் காட்டிவிடுவதால்,

பார்ப்பனீய வளர்ப்பு
கங்காணி வேலை
வெண்சாமரம் வீசுவது
கழகத்தை ஒழிப்பது

ஆகியவை யாவும் இனிப் 'பஞ்சாமிருதம்' ஆகிவிடுமா!

**கோழைகள்! துரோகிகள்!! — என்றெல்லாம் வெளுத்து வாங்குகிறார் காமராஜர், கூட்டணியை.**

மலை குலைந்தாலும் மனம் குலையாத மன்னன்—இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றதே, துளியாவது 'சட்டை' செய்தாரா-என்று காமராஜர் பற்றி புகழ்பாடினோர், இப்போது கண்களை அகலத் திறந்தபடி, என்ன இவர் இவ்வளவு கிலிகொண்டு குளறுகிறாரே!—என்று கேட்பர், அப்படி, ஆர்ப்பரித்திருக்கிறார் காமராஜர்—கல்லூரிக் கூட்டமொன்றில்.

என்னைப் பொறுத்த மட்டிலே, தம்பி! எனக்கு இந்தக் காமராஜர்தான் புரிகிறது!! ஏனெனில் இது தான் உண்மைக் காமராஜர், நாம் சந்தித்தாகவேண்டிய காமராஜர்.

மெத்தச் சிரமப்பட்டு அவர், தம்முடைய இயல்பை மறைத்துவைத்திருந்தார் — மயங்கிக் கிடந்தனர் நமது தோழர்களிலேயே சிலர்! இப்போது, உண்மைக் காமராஜர், லயோலா கல்லூரி உறுமல் மூலம் தெரிகிறார்; நம்மவர், நல்லவர் என்று சொந்தம் கொண்டாடும் தோழர்களின் மயக்கம் தெளிய இது உதவும்— இன்னும் இரண்டோர் 'கர்ஜனைகள்' தேவை—அவசரமாகத் தேவை!

தேனி நடத்துவதும் தெருச் சண்டையும், சிண்டு முடித்து விடுவதும் சீட்டு எழுதி அனுப்புவதும், கட்டை விரலை வெட்டுவேன், நாக்கை அறுத்துவிடுவேன் என்றெல்லாம் கண்டபடி பேசுவதும், முறைகளாகக் கொண்டு தலைவரானவர், எவ்வளவு நாட்களுக்கு நாசுக்குப் பூச்சும் நளினமான பேச்சும் கொண்டு மறைந்து வாழ முடியும்? உண்மைக் காமராஜர் லயோலா கல்லூரியில் தெரிகிறார்.

கோழைகள் — என்று நம்மை ஏசிவிடுவதாலேயே, இவர் வீராதிவீரர் என்று ஆகிவிடாது— மெத்தக் கோபம் வந்துவிட்டது என்பதைத்தான் காட்டிக்கொண்டிருக்கிறார், அந்தப் பேச்சின் மூலம். இருக்காதா, தம்பி! அறிக்கைவிட்டு கிளர்ச்சிகளை நிறுத்திவிடும் அலாவுதீன் என்றல்லவா இவருக்கு வடக்கே கீர்த்தி இருந்துவந்தது. அது போய்விட்டதல்லவா, அதனால் பாபம் அவருக்கு எரிச்சல், குடைச்சல்; அந்தக் குடைச்சலால் குளறுகிறார். அதனால், இம்முறையில், உண்மைக் காமராஜர் வெளியே தெரியச் செய்தது குறித்து, நான் மகிழ்கிறேன்; ஏனெனில், சீறும் சிறுத்தைகளைவிட நயவஞ்சக நரிகள் தான், அரசியலுக்குப் பேராபத்து.

தம்பி! நாம், சில கொள்கைகளைக் கொண்டவர்கள் — எனவே கோணல் வழி போகக் கூடாதவர்கள் என்ற உணர்வு நமக்கு உயிரூட்டம் அளிக்கிறது.

அந்த உயிரூட்டம்தான், சர்வ கட்சிக் கூட்டணியில் சேர்ந்து, நாம் நமது 'பங்கினை'ச் செலுத்துவதற்கான திறத்தை நமக்கு அளித்தது.

இதிலே கிடைத்த வெற்றிக்காகக் குருதி கொட்டிய தோழர்களின் 'நாமத்தை'ப் பஜிக்கிறேன்.



திறம்படப் பெரும்படை நடத்திய அந்தோணிப்பிள்ளை. கூட்டணியின் செயலாளராகி வெற்றிக்கு வழிகோலினார்.

அவர்கட்கு என் வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

கஷ்டநஷ்டமேற்ற நண்பர்கட்கு, என் மரியாதை கலந்த வணக்கம் செலுத்துகிறேன்.

கண்ணியத்தை நாம் கடைப்பிடிக்கவும், காரியமாற்றும் திறனைப் பெறவும் நமக்குப் பேருதவி அளித்த கூட்டணித் தோழர்களுக்கெல்லாம் நன்றிகூறிக் கொள்கிறேன்.

அரியதோர் வெற்றி கிடைத்திருக்கிறது, இது நமது ஆற்றல் வளரவும், ஆர்வம் பொங்கவும்மட்டுமல்ல, தம்பி! அடக்க உணர்ச்சியை நாம் பெறவும், அறநெறியில் அசையாத நம்பிக்கை கொள்ளவும் உதவுமாக.

வாழ்க கூட்டணி! வளர்க வெற்றி!

அன்பன்,

**அண்ணாதுரை.**

# இலண்டனில் தமிழ்

லண்டனில் தமிழ் முழக்கம் நிரம்பியிருக்கிறது என்று சிலர் கருதிக்கொண்டிருக்கலாம். பத்து, எட்டு என்ற எண்ணிக்கை அளவில்தான் மாணவர்கள் தமிழ் படிக்கிறார்கள். பி. ஏ. தமிழ்ப் படிக்கும் சிலரும், தோட்டத் தமிழ்ப் படிக்கும் சிலரும், இருக்கும் சிறப்புத் தான் காணப்படுகிறது. தேயிலைத் தோட்டத்தில் கங்காணியாக இருந்து வேலை பார்ப்பதற்காகத் தமிழ்ப் படிக்கின்ற மாணவர்கள் தாம் அதிகம். அன்றி, பி.ஏ. எம்.ஏ. பட்டத்திற்குப் படிக்கின்றவர்கள் மிகச் சுருக்கம். இங்கே காப்டன் பதி என்பார் இருபத்தெட்டு ஆண்டுகளாக இருந்து நன்றாகப் பணியாற்றுகின்றார். அன்றியும் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் சில திங்கள் இருந்து எங்களோடு பழகித் தமிழிலக்கியம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் கற்றுச் சென்ற ஜான்மார் என்ற ஆங்கிலேயர் அங்கேதான் பணியாற்றுகிறார். இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். பதிற்றுப்பத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் நிலையில் அவர் இருக்கிறார்.

இன்னும் லண்டனில் ஒலி இயல் தலைவராகப் பேராசிரியர் பர்த் இருக்கிறார். அவருடைய ஆய்வுக் கூடத்தைக் காண்பதற்கும சில வசதிகள் செய்து தரப்பட்டன.

**ஆஷர்** என்னும் அவருடைய மாணவர், முன்னரே பி. ஏ. பட்டம் பெற்று, இலததீன், பிரெஞ்சு இவைகளில் தேர்ச்சிபெற்றவர். இப்பொழுது அவர் இந்தியாவிற்குத் தமிழ் கற்க வந்துள்ளார் என்பதைக் குறிப்பிடலாம்.

*

இனி பல்வேறு இடங்களில் அராபிக் பேராசிரியர், சமஸ்கிருத பேராசிரியர், தமிழ்ப் பேராசிரியர் என்று சொல்லக்கூடியநிலையிலேயுள்ள வேறு சிலர் ஆகியவர்களையெல்லாம் காண்கின்ற பேறு பெற்றேன். இலண்டனில் இருக்கிற பிரப் போன்ற பெரிய அறிஞர்களையெல்லாம் சந்தித்தேன். ஆக்ஸ்போர்டில் இந்தியக் கலை நிலையம் என ஒன்று இருக்கிறது. அந்த நிலையத்தில் பேராசிரியர் பர்ரோ சமஸ்கிருதப் பேராசிரியராக இருக்கிறார். அவரின்கீழ் யாழ்ப்பாணத்து திரு. சதாசிவம் என்பார் தமிழிலே ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார். ஐந்து ஆண்டுகள் ஆசிரியராக இருந்து பணியாற்றிய அவர் திராவிட வினைச்சொற்கள் என்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வருகிறார். அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரையைப் பார்த்து என் கருத்துக்கள் சிலவற்றைக் கூறும் வாய்ப்பும் ஏற்பட்டது. இந்த டாக்டர் பர்ரோ என்பார் வருங்காலத்தில் தமிழ் நாட்டிற்கு டாக்டர் கால்டுவெல்போலத் தொண்டு செய்யக்கூடிய நிலையிலே இருக்கிறார். கால்டுவேலர் திராவிடமொழி ஒப்பிலக்கண நூலில், தெலுங்கு

இங்கிலாந்துக்குச் சென்று வந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் அறிஞர், அ. சிதம்பரநாதனார் தரும், அனுபவத் தொகுப்பு.

கன்னடம், மலையாளம் போன்ற இவையெல்லாம் ஓர் இனத்தன, ஒரு குடும்பத்தன; இவை இந்திய ஐரோப்பிய மொழியினின்று வேறுபட்டவை, சமஸ்கிருதத்தினின்று வேறுபட்டவை என்று ஆதாரத்தோடு காட்டியவர்.

சதபத பிராமணம், இருக்கு வேதம், மகாபாரதம், பாகவதம் முதலிய சமஸ்கிருத நூல்களில் பல்வேறு தமிழ்ச் சொற்கள்போய்ச் சேர்ந்து இருக்கின்றன என்ற கருத்தைத் தக்க ஆதாரத்துடன் பேராசிரியர் பர்ரோ அவர்கள் நிறுவி வருகிறார்கள்

இக்கால மொழி இலக்கண நூலறிவு நிரம்பப் படைத்து நூல்கள் எழுதியுள்ள பேராசிரியர் எல். ஆர். பாமர் என்பவரை ஆக்ஸ்போர்டில் சந்திக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. மொழி இலக்கணச் செய்திகள் பற்றி இருவரும் அளவளாவினோம். 'தாங்கள் எழுதியுள்ள நூலில் தமிழைப் பற்றி மறு பதிப்புக்களிலாவது சில குறிப்புகள் எழுதிச் சேர்த்தல் வேண்டும்' என்பதைத் தெரிவித்தேன். அவர் அவ்வாறு செய்வதாகவும் ஒப்புக் கொண்டுள்ளார்.

தமிழ்ப் படிப்பிற்குச் சிறந்த இடம் லண்டன் பல்கலைக் கழகத்திலே அளிக்கப்படும் என்பதும், பிற பல்கலைக் கழகங்களில் இல்லை என்பதும் அண்மையில் அங்கு செய்யப்பட்டுள்ள முடிவுகள். ஆயினும் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகிய இடங்களிலும் தமிழ் நூலில் ஆயவேண்டிய முறைகளைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டு, பின் அவற்றைப் புகுத்தித் தம்முடைய குறிக்கோளை நிறுவுவதற்குப் பழக்கம் சிலர் பெறுகிறார்கள். அந்த முறைகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மனம் உள்ளவர்கள், பொருள் உள்ளவர்கள் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், லண்டன் போவதாக இருந்தால் சில பேராசிரியர்களுக்கு நான் கடிதம் தருதலும் இயலும். அங்குள்ள அறிஞர்கள் மாணவர்களை அனுப்புங்கள் நாங்கள் பயிற்சிபண்ணி அனுப்புகிறோம் என்கிறார்கள்.

நூல் நிலையம், பொருட்காட்சி சாலை இவற்றைப்பற்றி சில குறிப்பிட விரும்புகிறேன். அங்குள்ள நூல் நிலையங்களைப் பார்த்தாலே ஏன் இங்கேயே இருக்கக்கூடாது, வீட்டிற்கு ஏன் போகவேண்டும், என்ற எண்ணம் தோன்றும்படியாக அவ்வளவு அழகாக வைக்கப்பட்டிருக்கின்றன. அடுக்கி வைத்திருக்கும் காட்சியும், தொகுத்து வைத்திருக்கும் காட்சியும் அழகாக இருக்கின்றன. புத்தகங்கள் பூசை செய்வதற்காக அல்ல, படிப்பதற்காக என்பதை உணர்ந்து அங்கே மக்கள் படிக்கிறார்கள்.

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி




தென்னிந்தியாவை, வடஇந்தியா விருப்பு வெறுப்பின்றி புரிந்துகொள்ளவேண்டும். உண்மையில் வடக்குக்கு எதிராக தெற்கு கிளர்ந்து எழுந்து நிற்கிறது. தெற்கேதான் உண்மை இந்தியாவைக் காணமுடியும். அங்குதான் புராதனக் கலாச்சாரம் இலங்குகிறது.

தென்னிந்தியாவுக்கு வட இந்தியா அநீதி இழைத்துள்ளது என்று நிரூபிக்கத் தென்னிந்தியர் சரித்திரத்திலிருந்தும் கர்ணபரம்பரைக் கதைகளிலிருந்தும் ஆதாரம் காட்ட முற்படுகின்றனர். அவ்வித உணர்ச்சிகளை நாம் அசட்டை செய்துவிடமுடியாது. ஆனால் மிக்க அனுதாபத்துடன் பரிசீலிக்கவேண்டும். தென்னிந்தியர்களை நீங்கள் புரிந்துகொண்டு, அவர்களிடம் உங்களுக்குக் கெட்ட எண்ணம் எதுவும் கிடையாதென்றும், எப்போதும் எல்லாத் தகராறுகளையும் நேர்மையாகத் தீர்த்துக்கொள்ளவே விரும்புவதாகவும் வாக்குறுதி அளிக்க வேண்டும்''

*

நான்சென்ஸ்! காட்டுமிராண்டிகள்! சிறுபிள்ளைத்தனம்!—என்று எரிச்சல் மொழிகளை அள்ளி வீசிய நேரு பண்டிதரை நினைவில் வைத்துக்கொண்டுதான் கவர்னர் பிரகாசா, பரீலியில் பேசியிருக்கிறார்போலும், 2ந் தேதி.

கெட்ட எண்ணம் எதுவும் கிடையாது. தகராறுகளை நேர்மையாகத் தீர்த்துக்கொள்ளவே விரும்புகிறோம்.

இவ்வண்ணம், வாக்குறுதி அளிக்க வேண்டும் என்கிறார், பிரகாசா. ஏனெனில், தென்னிந்தியர், சரித்திரங்களிலிருந்தும், கர்ணபரம்பரைக் கதைகளிலிருந்தும் ஆதாரங் காட்டுகின்றனராம். அதனால், நமது ஆத்திரமும் ஆவேசமும் பயனளிக்காது; அனுதாபமும் அன்பும் கொண்டு, அவர்கள் கூறுவதை ஆலோசிப்பதாக வாக்குறுதி அளிக்கவேண்டும்-என்று வலியுறுத்துகிறார், கவர்னர், வடநாட்டிலிருப்பவர்களை.

வடநாடு வேறு, தென்னாடு வேறு என்று சரிதங்களிலிருந்து நாம் எடுத்துக் காட்டும் ஆதாரங்களை, கவர்னர் மறுக்கவில்லை. அச்சத்தைத் தெரிவிக்கிறார், அப்படி அவர்கள் ஆதாரங்களை எடுத்துக்காட்டிவருகிறார்கள், 'ஆகவே ஜாக்ரதை!' என்பதுபோல.

எதை மாற்றிக் கூறினாலும், ஒரு நாட்டின் வரலாற்றுண்மைகளை மறுத்துரைக்க இயலாது என்பதைக் கவர்னர் அறிய நேர்ந்தது, அகமகிழ்ச்சிக்குரிய சேதியே. இதனை, அன்பர்கள் யாவரும், ஊன்றி உணரவேண்டுமென விரும்புகிறோம்.

தக்கணமும் அதிற் சிறந்த திரவிட நற்றிரு நாடும், என்று பாடினார் பேராசிரியர் சுந்தரனார்; கனகனும்விசயனும் வீசிய சுடுசொல் கேட்டு, புலியெனச் சீறிச் சென்றான், சேரன் செங்குட்டுவன்; இதோ, பாண்டியன் கூட இமயம் சென்று வெற்றி பொறித்திருக்கிறான். பெயர் தெரியவேண்டுமா? ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் — என்று ஆதாரத்தோடு, செப்புகிறோம். சேரனும், பாண்டியனும்தானே, என்று இழுக்காதீர்கள், மூவேந்தர்களிலே இன்னொருவனான சோழனும் வடநாட்டை வெல்லாமலிருந்ததில்லை கரிகாற்பெருவளத்தானின் கதை தெரியுமா, உமக்கு என்று கேட்கிறோம். கசடரைத் தவிர, பிறர் எவரும், இந்த உண்மைகளை மறுக்கமுடியாது.

புலி, வில், கயல்—பொறித்த கொடிகள், அன்றோர் நாள் வடவரின் நாட்டிலே, தமிழர் தம் புகழ் விளக்குவது போலப் பறந்தன.

நெஞ்சையள்ளும் இதுபோன்ற வரலாற்றுக் குறிப்புகளை நாம் அள்ளி வழங்கி, நமது கோரிக்கைக்கு ஆதாரம் காட்டுவது கண்டு, வடவரின் தூதுவரான பிரகாசா அஞ்சுகிறார். திராவிடப் பிரிவினையாளர் தம் பேச்சை இனியும் ஏளனம் செய்தோ, காதுகொடுக்க மறுத்தோ காலந் தள்ளிவிடமுடியாது. அன்பாலும், அரவணைப்பாலும், தீயை அணைக்க முயலவேண்டும் என்று தன்னவருக்குப் போதிக்கிறார்.

நாம் காட்டிவரும் சரிதச் சான்றுகள் வடநாட்டுக் கவர்னரின் கண்களைத் திறக்கிறது.

ஆனால், நமது பக்தவத்சலங்களுக்கு இந்தச் சரித ஆதாரங்கள் கேலிக்குரியதாகத் தென்படுகிறது.

பனப்பாக்கம் என்னும் சிற்றூரிலே சென்று பேசிய இச்சீமான் சொன்னாராம், ''இந்தக் கழகத்தார், பேசுகிறபொழுது, சேர சோழ பாண்டியன் என்கிற மூவேந்தர்களுடைய பெருமைகளை வாயாரப் புகழ்கிறார்கள். அப்படியிருக்கும்போது, தட்சிண ராஜ்ய எதிர்ப்பை எதற்காக எதிர்க்க வேண்டும்?'' என்பதாக.

சேர சோழ பாண்டியன் பூமிகளை ஒன்றாக இணைப்பதுதான் தட்சிண ராஜ்யமாம் ஐயோ, மூளையே!!

சேரனும், சோழனும், பாண்டியனும் அன்று வாழ்ந்தார்களென்றால் தமக்கெனத் தனித் தனி நாடு அமைத்துக்கொண்டுதான் வாழ்ந்தனரே அன்றி, ஒரு கூட்டுராஜ்யம் அமைத்துக் கொண்டு அல்ல.

அவர்களுக்கிடையும்கூட சச்சரவும் சண்டையும் மூண்டதுண்டு-தத்தமது எல்லைகள் சம்பந்தமாக. அதனால், கனகவிசயரின் பரம்பரையினரிடம் கால்பிடித்து வாழ்வோம் என்று கருதியதில்லை, அவர்கள்.

இந்த அடிப்படையை உணரும் சக்தியிருந்தால் பக்தவத்சலம் பல்லிளித்துக்கொண்டு கிடக்கமாட்டார், டில்லியிடம், எல்லைப் பிரச்னைக்காக தமிழர்கள் நடாத்திய அர்த்தாலினை எள்ளிநகையாடியும் பேச முயலமாட்டார். என்ன செய்வது? தாசர் புத்தி!!

வடநாட்டுக் கவர்னர், நாம் கூறும் சரிதச் சான்றுகளைக்கண்டு, சமரச ஞானம் போதிக்கிறார் — நமக்கல்ல, வடவருக்கு.

இந்த உடன் பிறந்தே கொல்லும் வியாதி, அதே சான்றுகளை எடுத்து வைத்துக்கொண்டு நமக்குப் புத்தி போதிக்க வருகிறது. பொருளுள்ள போதனையோவெனின், அதுவுமில்லை.

★

ஈழத்து செய்தி அறிய!
படியுங்கள்
"உரிமைக்குரல்"
தனிப்பிரதி 0—2—6
வருடச்சந்தா 8—0—0
விபரங்கட்கு
நிர்வாகி
உரிமைக் குரல்
தா. பெ. எண். 1363
கொழும்பு.

சென்ற இதழில் நாவலர் பாரதியார், தருமன் குறித்து வழங்கிய கருத்துரையைக் குறித்து, மா. கி. தசரதன் தரும் கருத்து.

# தருமன் சால்பு

பாரதக் கதையில் வரும் பாத்திரங்களில், தருமன் மிகவும் நல்லவன் என்றும், சுயோதனன்—துரியோதனன் — மிகத் தீயவன் என்றுமே வழிவழியாகச் சொல்லிக் கொண்டு வருகின்றார்கள். உலக மாந்தரில் முற்றிலும் நல்லவராகவோ அன்றித் தீயவராகவோ இருக்கும் முறைமை இன்றேனும், அதனைப் பழங்காலத்தில் ஆரிய நெறியினர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஆரியர் இலக்கியங்களில் நன்மையே உருவெடுத்தாற்போன்று ஒரு பாத்திரத்தையும் தீமையே வடிவு கொண்டாற்போன்று பிறிதொன்றனைப் படைப்பதே அவர்கட்கு வழக்கமெனலாம்.

கட்டுக் கதைகள் எனினும், இராமாயணத்திலும், மாபாரதத்திலும் இவ்வண்ணமே நன்மை தீமை இரண்டினையும் தனித்தனியே பிரித்து மோதவிட்டிருக்கின்றனர்.

தமிழர் காவியங்கள் இன்று அதிகமாகக் கிடைக்காததினால் தமிழர் நெறியாதென நிச்சயமாகக் கூற இயலவில்லைஎனினும், கிடைக்கும் ஒரு சில நூல்களின் துணை கொண்டு ஆராயும்போது தமிழர் வாழ்க்கையோடு இயையுடைய — நன்மையும் தீமையும் கலப்புள்ள பாத்திரங்களையே படைத்தனர் எனக் கொள்ளலாம்

குணமும் குறையும் கொண்ட கோவலனைத்தான் நாம் காணுகின்றோம்.

உலகியலிலும் நடைமுறை அவ்வண்ணம் இரண்டும் கலந்ததாகவே உள்ளது. எனவே, வழக்கமாகக் கூறப்படும் முறையில் செல்லாது, தருமன், சுயோதனன் என்ற இரு பாத்திரங்களையும்பற்றி நினைத்துப் பார்த்தால், தருமனை இன்று பலர் நினைப்பதைப்போல முழுவதும் நல்லவனென்றோ, சுயோதனனை முற்றிலும் தீயவன் என்றோ நினைக்கக்கூடவில்லை.

நாவலர் பாரதியார் கூறியாங்கு தருமனின் சால்பு பலவிடங்களில் இருந்து காணப்படுகின்றது. கதையின் தொடக்கத்திலிருந்தே, தெய்வீகம் படைத்தவனுகக் கருதப்பட்ட கண்ணன், தருமாதியர்பால் அளவற்ற அன்பும் பரிவும் கொண்டிருந்திருக்கின்றான். உலக நீதி, நேர்மை, இவை கருதும் துரோணன், பாட்டன் பீஷ்மன்போன்றோர் சுயோதனன் பக்கலிலேயே இருப்பதனை நினைக்கும்போது, சுயோதனன் செய்ததாகக் கூறப்படும் தீமைகளுக்கும், அடிப்படையில் நல்லதொரு காரணம் இருக்க வேண்டும் எனவே நினைக்கத் தோன்றுகின்றது.

மூத்த மகன் பட்டத்திற்கு உரியவன் என்ற நியதியைத் தருமாதியர்கள் தகர்ப்பதற்குப் பலவகையிலும் பாடுபட்டிருக்கின்றனர். அதோடன்றி சுயோதனனுக்கு நிகராவதுபோல் அத்தினபுரியில் மாளிகை எழுப்பி, அதில் பெரியதொரு யாகம் நடாத்தித் தாங்களே பெரியவர்கள் என நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

"அண்ணன் மைந்தன் அவனிக்
குரியவன் யானன்றோ?—அவர்
அடியவராகி மெமைப்பற்றி நிற்றல்
விதியன்றோ?"

என்று சுயோதனன் கேட்பதாக சுப்பிரமணிய பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் இசைத்துள்ளார். எனவே சுயோதனன் மனதில் வழக்கத்தையும் முறையையும் அடிப்படையாகக் கொண்டெழுந்த இந்த ஆத்திரம் இருந்திருக்கின்றது. மேலும்

சந்திரன் குலத்தே பிறந்தோர்
தந் தலைவன் யான் என்று
சகமெலாம் சொல்லும் வார்த்தை
மெய்யோ வெறும் சாலமோ?

என்றும் அவன் மனம் திகைத்துக் கேட்கின்றது. இது காரணமாகவே அவன் பல தீமைகளில் இறங்கினானே என எண்ணத் தோன்றுகின்றது.

"சதி செய்தார்க்குச் சதிசெயல்
வேண்டும் என் மாமனே"

என எண்ணுகின்றான்.

தருமன் முற்றிலும் நல்லவன் அன்று என்று கூறுவதற்கும் மூல நூலிலும் பல சான்றுகள் கிடைக்கின்றன.

தருமனை மாயச் சூதில் தோற்கடித்துவிட்டனர் என அபாண்டப்பொய் ஒன்றனைக் கூறுகின்றனர். தருமனுக்கு இயற்கையாகவே சூதில் மிக்க விருப்பம் உண்டு எனத் தெரிகின்றது.

நீதித் தருமனும் சூதில் அன்புள்ளோன்"
—பாஞ்சாலி சபதம்

எனப் பாரதியார் பாடி இருப்பதோடு,

தருமன் சூதாட்டத்திலே பிரியமுடையவன் என்றும், அழைத்தால் எளிதில் இணங்கிவிடுவான் என்றும் சகுனி கருதுவதாக முதனூலிலேயே காணப்படுகின்றது.

என்று இவ்வரிக்கு விளக்கவும் குறிப்புரையில் கூறப்படுகின்றது.

சூதாட்டத்தின்போது இவ்வுண்மை நன்றாகப் புலனாகின்றது. தோற்கத்தோற்க மேலும் மேலும் தருமன் சூதை விரும்பி ஆடுகின்றான். விடுதல் அறியாத விருப்புடன் காணப்படுகின்றான். பல கோடிப் பொன் வைத்திழந்தவன் தம்பியரை வைத்திழக்கிறான்; பத்தினி பாஞ்சாலியையும் வைத்திழக்கின்றான். எனவே தருமன் சூதில் விருப்புடையோன் என்பது தெளிவாகப் புலனாகின்றது.

போகட்டும், இவனுக்கு மன்னன் ஆகும் தகுதிதான் பிறவகைகளில் இருக்கின்றதோ எனின் அதுவும் இல்லை எனத் தெரிகின்றது.

"தம்பியர் தோள் வலியால்—இவன்
சக்ரவர்த்தி என்று உயர்ந்தான்"

என்றுதான் நினைக்கவேண்டி இருக்கிறது.

கிழவியர் தபசியர் போல்—பழங்
கிளிக் கதை படிப்பவன்,
பொறுமை என்றும்
பழவினை முடிவென்றும்—சொலிப்
பதுங்கி நின்போன்
மறத் தன்மையிலான்
வழவழத் தருமன்........

என்றுதான் சுயோதனன் இவனைப் பற்றிக் கருதி இருக்கிறான்.

மன்னனுக்கு வேண்டிய முக்கியமான பண்பு வீரம், ஆண்மை என்பவை, இவை தருமனிடத்தில் இல்லை என்பது தெளிவு.

மேலும் பாரதக் கதையின்படி இறுதிக் கட்டத்தில் இவன் இறவா அசுவத்தாமனை இறந்தவன் என நினைக்குமாறு கூறியமைக்காகத் தண்டனையும் பெறுவதாகக் கூறுகின்றார்கள்.

எனவே தருமன், என்னதான் உயர்வாகக் கூறப்பட்டாலும், ஒரு சாதாரண சராசரி மனிதனைப் போல் வாழ்ந்தவனே என்றும் — குறைகள் கொண்டவனே என்றும் தெளிவாகப் புலனாகின்றது. ★

# இலட்சத் தீவுகள்

சென்னை மாநிலத்தின் மேற்குக் கரையி லுள்ள மலபார் மாவட்டத்துக்கு மேற்கே சில நூறு மைல்களுக்கு அப்பால் சின்னஞ் சிறு தீவுக் கூட்டங்கள் பல இருக்கின்றன. அங்கு குற்றமிழைப்பவர்கள் கிடையாது; பொலீஸ் காரர்கள் இல்லை. ஆனால் இந்தியாவுக்குச் சுதந்தரம் கிடைத்து ஏழாண்டுகளான பின்னருங்கூட இங்குள்ள கப்பல்களுக்கு வழிகாட்டக் கூடிய கலங்கரை விளக்கங்களின்மீது பிரிட்டிஷ் கொடியொன்று பறந்துகொண்டிருக்கிறது!

இத்தீவுகளின்பெயர்கள், அமீன் தீவு, இலட் சத்தீவுகள் என்று வழங்குகின்றன.

*

இலட்சத் தீவுக் கூட்டத்தை இலட்சத் தீவு கள், அமீன் தீவுகள் என இரண்டு பகுதிகளா கப் பிரிக்கலாம். இலட்சத்தீவுப் பகுதியில் மனி தர்கள் வசிக்கின்ற ஐந்து தீவுகளும், மனிதர் கள் வாழாத ஒன்பது தீவுகளும், அடங்கியுள் ளன. அமீன் தீவுப் பகுதியைச் சேர்ந்த ஐந்து தீவுகளிலும் மக்கள் வாழ்கின்றனர். இலட்சத் தீவுகள் மலபார் மாவட்ட கலெக்டரின் ஆதிக் கத்தின் கீழும், அமீன் தீவுகள் தென்கன்னட கலெக்டரின் ஆதிக்கத்தின் கீழும் இருக் கின்றன.

*

ஒரு தீவில் வாழ்பவர்களுக்கும் மற்றொரு தீவில் வாழ்பவர்களுக்குமிடையே சிற்சில வேறு பாடுகள் காணப்படுகின்றன வெனினும், எல் லோரும் ஒரே இனத்தவர்தாம். மேற்குக் கடற் கரையிலிருந்து 125 மைலில் தூரத்தில் இலட்சத் தீவுகளும், 250-கல் தொலைவில் அமீன் தீவுகள் இருக்கின்றன. மினிகாயில் ஒரு தீபஸ் தம்பம், ஒரு தந்தி, கம்பியில்லாத் தந்தி நிலையம், ஒருவானிலை ஆராய்ச்சி நிலையம் ஆகியவை இருக்கின்றன. மினிகாய் தீவுகளிலிருப்பவர்கள் தங்களை 'மஹல்' என்று சொல்லிக்கொள்ளு கின்றனர். அவர்கள் பேசும் மொழியும் அவ் விதப் பெயரொன்றைக் கொண்டதாகவே இருக் கிறது.

பெண்களுக்கு ஆறிலிருந்து எட்டு வயதுக் குள்ளும், ஆண்களுக்கு பதின்மூன்று வயதிலி ருந்து பத்தொன்பது வயதிற்குள்ளும் விவாகம் நடைபெற்றுவிடுகிறது! ஆனால் விவகாரத்து வெகு சாதாரணமாக நடைபெறுகிறது.

*

இத்தீவுகளில் மனிதர் எழுதிய சட்டங்கள் கிடையா; போலீஸ் இல்லை; குற்றங்களும் நடை பெறுவதில்லை! ஆனால் ஒவ்வொரு தீவிலும் "அமீன்" என்பவரின் ஆதிக்கத்தில் ஒரு கச் சேரி (காரியாலயம்) இருந்து நிர்வாகத்தை நடத்தி வருகிறது. மினிகாய், இலட்சத்தீவுகளை பிரிட்டிஷ் சர்க்கார் எடுத்துக்கொண்டதற்கு மூன்று வருடங்களுக்குப் பின் கொண்டுவரப் பட்ட "1912-ம் வருட லட்சத்தீவுச் சட்டங்கள்" அங்கு அமுலிலிருந்து வருகின்றன. இதற்கு முன்பு இத்தீவுகளை, கள்ளிக்கோட்டையைச் சேர்ந்த பீபி ஒருவர் ஆட்சிபுரிந்து வந்தார்

ஒவ்வொரு ஆணும் தலைக்குப் பன்னிரண்டு அணாவும், ஒவ்வொரு பெண்ணும் தலைக்கு நாலணாவும் தலைவரி செலுத்துகின்றனர். இவையன்றி, தென்னந் தோப்புகளுக்கு வேறு வரி வசூலிக்கப்படுகிறது.

மினிகாய் தீவினர் ஆறு 'அத்ரிஸ்'கள்—பாம்பு போன்ற தோற்றத்தில் தயாரிக்கப்பட்டி ருக்கும் படகுகள் வைத்திருக்கின்றனர். இவை ஒவ்வொன்றும் ரூ 30,000 செலவில் கட்டப்பட் டிருக்கின்றன, ஒவ்வொரு படகுக்கும் 43-துடுப்பு கள் இருக்கின்றன. படகு ஓட்டப்பந்தயம் இங்கே மிகப் பிரபலமாயிருக்கிறது. இத்தீவு வாசிகள் தங்களுடைய கொப்பரை, தேங்காய், கயிறு முத லியவற்றைக் கொடுத்து அதற்குப் பதிலாக அரிசி, சர்க்கரை முதலியவற்றை வாங்கிக் கொண்டு பண்டமாற்று வியாபாரம் செய்கின் றனர்.

*

மீன் பிடித்தலே இவர்களின் முக்கிய தொழில். பால் என்றால் என்ன வென்றே இவர் களுக்குத் தெரியாது! அங்கு ஒரு பசுவோ அல் லது வெள்ளாடோ கிடையாது!

*

இந்தியாவுக்கும் இத்தீவுகளுக்குமிடையே தபால் தந்திப் போக்கு வரவு சாதனங்கள் இல் லாமையால், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ்காரர் கள் வெளியேறிய செய்தி மூன்று மாதங்கள் சென்ற பிறகுதான் இங்கு எட்டியது!

இத்தீவுகள் திப்பு சுல்தானால் கைப்பற்றிக் கொள்ளபபட்டன. 1759ம் ஆண்டில் அவரு டைய ஆட்சி முடிவுற்றதும் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தின் கீழ் இவை வந்தன; கள்ளிக் கோட்டை பீபி இவற்றை ஆட்சிபுரிந்துவந்தாள். இப்போது அவர்கள் சுயாதீனம் பெற்றுவிட் டார்கள்.

தண்ணீர் சப்ளைவசதி மட்டும் அவர்களுக்கு இல்லை. இப்போது அவர்கள் குளங்களிலும் கிணறுகளிலும் தண்ணீர் எடுத்து வரு கின்றனர்.

இத்தீவு வாசிகள் நற்குணமுள்ளவர்கள். நபிகள் நாயகம் காலமான பின்னர், நூறு வரு டங்களுக்குள் இவர்கள் முஸ்லிம்களாகி விட்டனர். இத்தீவுகளில் ஏராளமான பள்ளி வாசல்கள் இருக்கின்றன. தங்கள் பழக்க வழக் கங்களில் இவர்கள் ஊறிப்போயிருக்கின்றனர். எவ்வித மாறுதலையும் இவர்கள் விரும்புவ தில்லை.

குறிப்பு:—நபிகள் நாயகத்துக்குப் பின் ஒரு நூற்றுண்டுக்குள் ளேயே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட மக்கள் வாழும் தீவுகள்.

"பரமசிவன் வந்து வந்து போவார். பதிவிரதைக் கின்னல் வரும்; போகும்" என்று நம்முடைய திரைப்படத் தயாரிப்பாளர்களைப்பற்றிச் சலிப்போடு பாடினர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். உண்மையும் அதுதான். அரைத்த மாவையே அரைப்பதில் திருப்தி காணுகின்றனர்! 'ஐயோ, புதுவழி புகுந்தால் பணம்போய் விடுமே' என்று அஞ்சுகின்றனர்!!

இதோ இந்தப் படத்திலிருப்பவரும் ஒரு படத் தயாரிப்பாளர்தான். ஆனால் அவர்களைப் போல, புகழ்பெற்ற நடிகர்களையோ, பழைய கதைகளையோ தேடவில்லை. புதுமையான முயற்சி ஒன்று செய்தார்! அம் முயற்சி, பணத்தை மட்டுமல்ல புகழையும் கொண்டு வந்து கொட்டு கொட்டென்று கொட்டிற்று!!

*

முப்பதாண்டுகளுக்கு முன்பு, 'வேலை கிடைக்குமா' என்று அமெரிக்காவிலுள்ள கான்ஸாங் நகரை வலம் வந்துகொண்டிருந்தான், ஒரு இளைஞன். பத்திரிகாசிரியர் ஒருவரைச் சந்தித்து, தனக்கு ஓவியம் தீட்டத் தெரியுமென்று சொன்னான். தீட்டிய படங்களையும் காண்பித்தான். "பூ! இவ்வளவு தானா? இதற்குப்பெயர் ஓவியமா! போய்வாப்பா!" என்று அவன் மனதை உடைத்தார், அவர். வயிற்றுப் பசியுடன், ஆனால் விடா முயற்சியுடன், 'மோட்டார் ஷெட்' ஒன்றில் குடியிருந்தவண்ணம், ஓவியங்களைத் தீட்டிக்கொண்டிருந்தான். ஒரு நாள் ஒரு சுண்டெலி, ஓடிவந்தது! அது, அங்கிருந்த மரச் சட்டத்தில் தாவித் தாவி விளையாடிற்று. அதன் ஆட்டத்தில் மனதை இலயிக்க விட்ட அவன், அதற்குக் கொஞ்சம் இரை போட்டு, வளர்க்க ஆரம்பித்தான். அவனுடைய பிற்கால முயற்சிகளுக்கு அந்தச் சுண்டெலிதான், குருநாதர் எனலாம்!

*

திரையுலகச் 'சுவர்க்கம்' என அழைக்கப்படும் ஆலிவூட்டில், 'கார்ட்டூன்' படத் தயாரிப்புக்காக, அவன் சென்றான். முதல் முயற்சி தோல்வியடையவே, மனம்மொடிந்த நிலையில் இருக்கும்போது, பழைய சுண்டெலி ஞாபகம் வந்தது. எடுத்தான், ஓவியக்கோலை; தீட்டினான், "Mickey Mouse" என்கிற கார்ட்டூன். படத்தின, ஆரம்பபூஜை அதுதான். அது, படமாக வெளிவந்ததும், அவன் தீட்டிய சுண்டெலியின் வீரதீர பராக்கிரமங்களைக் கண்டு உலகமே புகழலாயிற்று! 'புதுமை புதுமை' என்று சிறு குழந்தைமுதல் பெரியவர்கள் வரை போற்றிப் புகழலாயினர்.

*

மிருகங்கள் என்றால் அவருக்கு உயிராம்! 'மிக்கி மவுஸ்' படத்தில், சுண்டெலிக்கு 'பிளே பேக்'காகயிருந்து ஒலிகளை எழுப்பியதும் இவரே தான்—நம்முடைய படாதிபதிகளைப்போல, 'எல்லாம் தன்னாலே' என்று கருதுபவரல்ல, இவர், சிறுவிஷயம என்றாலும், ஆலோசனை கூறுவதற்கென்று, இலாகாக்களை வைத்திருக்கிறார். 134-பேர், இவருக்கு பத்தாண்டுகளுக்கு முன்பு, உதவியாளர்களாக இருந்திருக்கிறார்கள்! ஏதாவது ஒருயோசனை திடீரென ஏற்பட்டால், அது பற்றி உடனே விவாதிக்க இவருடன் எப்போதும் 12-பேர் இருப்பார்களாம். 24-ஆண்டுகளுக்கு முன்பு, 'மூன்று குட்டிப் பன்றிகள்—ஒரு பன்றி — ஒரு ஓநாய்' என்கிற கதையைப் படம் பிடிக்கலாமென்று எண்ணியபோது, இவரது உதவியாளர்கள், அது நிச்சயம் தோல்வியுறும் என்றார்களாம். அவர்களை மீறுமல், தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து, பிறகு அவர்களையும் சம்மதிக்கவைத்து அப்படத்தை வெளிக் கொண்டுவந்தார். அறுபதே நாட்கள்! யாருமே எதிர்பார்க்காத அளவுக்கு அந்தக் கார்ட்டூன் சித்திரம், வெற்றியளித்தது. எடுக்கப்பட்டு இத்தனை ஆண்டுகளாகியும், அந்தக் கார்ட்டூன் சித்திரம், இன்னும் ஓடுகிறது—உலகெங்கும்.



*

"என் வாழ்க்கையில் நான் வெற்றி பெற்ற இரகசியம் என்ன தெரியுமா? எடுத்த வேலையில் ஆசையும் ஆர்வமும் காட்டியதுதான்" என்று அறிவிக்கும் வால்ட் டிஸ்னே யின் ஆரம்பகால வாழ்க்கை, அப்பப்ப! ஒரு பெரும் புயல். அதனால் பணதிபதியானதும், பழையகாலத்தை மறந்து, சுகம் தேடப்போய் விடவில்லை. தொழிலில் அதிக ஊக்கமும், சிரத்தையும் காட்டி வருகிறார். "என்னுடைய தொழில் முயற்சிகள் ஒவ்வொன்றும் ஏனையோருக்குப் புதுமையாகவும், ஆச்சரியமளிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும்" என்கிறார். அதனால்தான் போலும், இவ்வாரம் தன்னுடைய காமிரா நிபுணர்கள் இருவரைத் தென் துருவத்துக்கு அனுப்பிவைத்திருக்கிறார். அமெரிக்க அறிஞர்கள், தென் துருவம் சென்றுள்ளார்களாம். அவர்களின் அனுபவங்களையெல்லாம் படம் எடுத்து வெளியிடப்போகிறாராம், வால்ட் டிஸ்னே. அவர் திரையுலகில் பிரபல கார்ட்டூன் தயாரிப்பாளராகமட்டுமல்ல, ஒவ்வொரு படியாக பல விசித்திர உண்மைகளை எடுத்துக் கூறும் படத்தயாரிப்பாளராக மாறி வருகிறார். இதன் மூலம், புதுமை கண்டவர்களின் உலகில், தனக்கும் ஒரு இடம் ஏற்படுத்திக் கொண்டார்.

"வண்டு"

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.